# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, ஆவணி 4௳ (20-8-72) ஞாயிறு 1391 றஜப் ஆகிர் 10 புத்தகம் 25 இதழ் 38


## தன்னாட்சி அமைத்தால் மட்டுமே தன்மானத்துடன் வாழ முடியும்!

—செல்வா.

"தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்துக்கு தன்னாட்சி பெறுவதே எமது நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய தமிழ் மக்கள் ஒன்றுபடவேண்டும்."

சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் உரையாற்றிய தந்தை செல்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்று தமிழ்ப்பேசும் மக்கள் இலங்கையில் இரண்

(7-ம் பக்கம் பார்க்க)

# தனிக்கொடி, நாட்டுப்பண் தனிச் சின்னம், உருவாகியது!

## அக்டோபரில் உரிமைப் போராட்டம்!

தமிழர் கூட்டணிக்கென தனிக்கொடி, நாட்டுப்பண், தனிச் சின்னம் ஆகியவற்றை தமிழர் கூட்டணியின் போராட்டத்திட்டக் குழு தயாரித்து விட்டது. தமிழர் கூட்டணியின் அடுத்த செயற்குழு இம்மாதம் 24ம் திகதி மட்டக்களப்பில் கூடும் போது, செயற்குழுவின் அங்கீகாரத்துக்கு இவை சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

தமிழர் கூட்டணியின் தேசியக்கொடி, சிகப்பு வண்ணத்தில் அமைந்திருக்கும். இதன் நடுவில் பொன் நிறத்தில் உதய சூரியன் காணப்படும்.

தமிழர் கூட்டணியின் தேசிய கீதமாக கவிஞர் பரமஹம்சதாசன் எழுதிய "வாழ்க ஈழத்தமிழகம்" எனும் பாடல் ஏற்றுக்கொள்ளப் படவிருக்கிறது இதை விட இளைஞர் எழுச்சிப்பண் ஒன்றையும தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு அங்கீகரித்திருக்கிறது.

தமிழர் கூட்டணியின் சின்னமாக உதய சூரியனே விளங்கும்.

இவை தமிழர் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதும், இக்கொடியையும், நாட்டுப்பண்ணையும், தமிழர்கள் நடாத்தும் பொது விழாக்களில் பயன்படுத்துமாறு தமிழர் கூட்டணி கேட்டுக்கொள்ளும் என்று தெரிகிறது.

தமிழர் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கும் அஹிம்சைப் போராட்டத்தின் முதல் கட்டம், பெரும்பாலும் அக்டோபர் முதலாம் திகதியே தொடங்கிவிடும் என்றும் அறியப்படுகிறது.

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நாட்டுப் பண் (தேசியகீதம்) வருமாறு:-

### எடுப்பு

வாழ்க ஈழத்தமிழகம், வாழ்க இனிது வாழ்கவே
மலைநிகர்த்திவ் வுலகில் என்றும் தலைநிமிர்ந்து வாழ்கவே

### முடிப்புகள்

அமிழ்தை வென்ற மொழியினள்
அருள் கனிந்த விழியினள்
அரிய பண்பு நிதியினள்
அவனிமெச்சும் மதியினள்
மமதை கொண்ட பகைவரும்
வணங்கும் அன்பு விதியினள்
வளரும் முப்பந்தைந்து இலட்சம்
மக்கள் கொண்ட பதியினள்

—வாழ்க

வானம்பாடி போல மீன்
கானம்பாடும் வாவிகள்
மலர்கனி குலுங்கிடும்
எழில் மிகுந்த சோலைகள்
தேனும் பாலும் பாய்ந்திடச்
செந்நெல் பொலியும் கழனிகள்
தெய்வ கற்பகத்தருக்கள்
உய்வளிக்கும் மாநிலம்!

—வாழ்க

மட்டிப்பனை மாவலி
பயில் அருவிமுத்தாறுகள்
பல வளங்கள் பொலியவே
எழில் நடஞ்செய்துலவிடும்
மட்டக்களப்பு, யாழ்நகர்,
மாந்தை, வன்னி, திருமலை,
மகிழ்வொடு மலைத்தமிழர்கள்
மலரடி தொழும் இனியவள்

—வாழ்க.

## "சீன ஆயுதங்களால் எங்கள் உரிமைப்போரை அடக்க முடியாது"

### வேலணையில் நாவலர் முழக்கம்!

"தர்மம் என்ற ஆயுதத்தைவிட பலம் வாய்ந்த ஆயுதம் உலகில் வேறு எதுவும் இல்லையாது. தர்மம் என்ற அந்த ஆயுதம் — எங்கள் கைகளில் இருக்கிறது. எனவே சீனர்களின் ஆயுதங்களைக் கொண்டு எம்மை அடக்கிவிடலாமென்று அரசு மனப்பால் குடிக்கக் கூடாது."

— இவ்வாறு வேலணையில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் உரையாற்றிய நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வேலணை கிராமசபை மைதானத்தில் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

"தமிழர் கூட்டணியின் ஒற்றுமையைக் குலைக்க முடியாது. இந்த ஒற்றுமையைக் குலைக்கச் சில பத்திரிகைகளும் பிரமுகர்களும் முயல்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது. நாம் கோருவது குறைந்தபட்ச ஆறு அம்சக் கோரிக்கையே ஆகும்.



"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றப் பதிவேடுகளைத் தமிழில் வைக்குமாறு அமைச்சர் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வேண்டுகோள் எப்போதும் மாற்றப்படக்கூடியது. எனவே சட்டத்தில் அதற்கு இடம் கொடுக்கும்படி நாம் கேட்கிறோம் என்றார்.

உடுவில் தொகுதி பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

(7-ம் பக்கம் பார்க்க)

### உடுப்பிட்டி சிவசிதம்பரத்தின் ஒரேயொரு கேள்வி!

"வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழை நிர்வாக மொழியாகவும் பதிவு மொழியாகவும் வைத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர்கள் கூறுகிறார்கள். அடிக்கடி அறிக்கை விடுகிறார்கள்.

'தமிழ் கடிதங்களுக்கு தமிழிலே பதில் தரப்படும்— தமிழ் பகுதியில தமிழில் நிர்வாகம் நடக்கும் என்றெல்லாம் குமாரசூரியர் அறிக்கை விடுகிறார்.

"நான் கேட்கிறேன் —ஐயா குமாரசூரியரே, ஏனைய அமைச்சர்களே நீங்கள் தமிழுக்கு தருவதாக வாயளவில் கூறும் உரிமைகளை, ஏன் அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்ய மறுக்கிறீர்கள்? நீங்கள் சொல்வது அந்தரங்க சுத்தியுடன என்றால் நீங்கள் வழங்கியிருப்பதாக கூறும் உரிமைகளை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யுங்கள்!

—உடுப்பிட்டி சிவா (வேலணைக்கூட்டத்தில்)

## ஈழத்தமிழர் பிரச்சினை: இந்திய பிரதமருடன் கருணாநிதி பேச்சு!

### தி. மு. க. எம். எல். ஏ. தகவல்

இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினை பற்றி தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்திய பிரதமர் திருமதி. இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார். இத்தகவலை தி. மு. க சட்டசபை உறுப்பினரான திரு. கோவை செழியன் லண்டனில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

'இலண்டன் முரசு' நிருபருக்கு இது சம்பந்தமாக அவர் அளித்தபேட்டியொன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்:—

'இலங்கையில் வாழும் தமிழர்கள் எங்கள் உடன் பிறப்பு. இன்றுள்ள இந்திய அரசியல் சட்டப்படி வெளிநாட்டுப் பிரச்சினைகளில் மாநில அரசுகள் தலையிட முடியாது. மத்திய அரசே தலையிட முடியும். என்றாலும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்திய

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞனுக்காக அழவில்லை!

— குணரத்தினம் —

அண்ணன் காசி ஆனந்தன்
அழகான தமிழ்ப் பேச்சாளன்
என்பதால் எனது நெஞ்சம்
இரங்கித் துடிக்கவில்லை !
வண்ணத் தமிழ்க் கவிதை
வடிக்கின்ற கவிஞனென்று
எண்ணியதால் என்இதயம்
இரங்கித் தவிக்கவில்லை !
என்னுடைய கவிதைகளை
எந்நாளும் பாராட்டும்
எந்நாட்டான் என்பதாலும்
இரங்கிப் பதைக்கவில்லை !
உடம்பெல்லாம் தமிழுணர்ச்சி
ஓடுகின்ற செயல் வீரன்
அடைபட்டுக் கிடக்கின்றான்
அதற்காக அழுகின்றேன் !
ஏமாற்றித் திரிகின்ற
எத்தர்கள் சிரித்துவாழ
ஓயாத உணர்ச்சிவீரன் — சிறையுள்
உறங்குவதால் அழுகின்றேன் !
தமிழனை விலங்கறுக்க
துடிக்கின்ற அண்ணனுக்கு
எமதரசார் விலங்கிட்டார் — அதை
எண்ணி அழுகின்றேன் !
தன்னலத்தைப் பாராமல்
தமிழ் மூச்சு விடுகின்ற
அண்ணன் நிலைகண்டு — நான்
இரங்கி அழுகின்றேன் !
வேலைக்குக் கிட்டாத
மருந்தைப்போல் காசியண்ணன்
பாழ்பட்டோர் சிறையினுள்ளே — வாடும்
பாவத்தால் அழுகின்றேன் !

★

## தமிழ்ப் பகையை வென்றாய்!

( ஆரையம்பதி ஆ. தங்கராசா )

உணர்வெல்லாம் தமிழ் சேர்த்து வந்தாய் — என்
உயிருக்குள் வெறியூட்டி நின்றாய் !
கனவல்ல தமிழ்நாடு என்றாய் — புதுக்
கவியாலே தமிழ்பகையை வென்றாய் !

அறம்பாடி எதிரிதனைக் கொல்வாய் — கொடும்
ஆட்சியரின் கொட்டமதை வெல்வாய் !
மறம்பாடித் தமிழ்ப்பகையைச் சாய்ப்பாய் — எங்கள்
மங்காத தமிழ்சிறக்க முரசெடுத்தொலிப்பாய் !

கண்ணான தமிழ்வாழ வந்தாய் — என்
கண்ணுக்குள் ஒளியாக நின்றாய் !
புண்ணான நெஞ்சத்தை வெறுத்தாய் — தமிழ்
பகைவரைப் பொந்துக்குள் ஒழித்தாய் !

வேட்ட நாய்போல நீ ஓடிவந்தாய் — குள்ள
நரிகளை ஓடநீ வைத்தாய் !
வேட்டுவனாக நீ நின்றாய் — அந்த
வேங்கையர் நெஞ்சத்தைப் பிளந்தாய் !

காட்டுக்கு நிலவெதற்கு என்றாய்! — கருங்
குரங்குக்கு நாடெதற்கு என்றாய் !
வீட்டுக்கோ விளக்கில்லை என்றாய் — இசை
வீணையின் நரம்பறுந்த தென்றாய் !

பாட்டுக்குப் பொருளாக வந்தாய் — இன்பத்
தமிழுக்கு வேலியாய் நின்றாய் !
ஏட்டுக்குள் இலக்கியமாய் சிரித்தாய்! — என்தன்
நினைவுக்குள் சங்கமமாய்ப் போனாய் !

★

## வேண்டுதல் வேண்டாமை

அடம்பனூர் இளவல்

சொந்தம் பந்தம் வேண்டாம்
துணையிருக்க மங்கை வேண்டாம்
தந்தக் காப்பு வேண்டாம்
தனிநாடு ஒன்றே வேண்டும்.
ஆண்டிகையிலோடிருக்கும்
அதுவுமெனக்கு வேண்டாம்.
பாண்டல் நிறை பகைவரெல்லாம்
பாரினிலொழிய வேண்டும்.
அழகு அணங்கு வேண்டாம்
அவள் தருமின்பம் வேண்டாம்
பழகிக் கழுத்தறுக்கும்
பாவிகள் அழிய வேண்டும்.
காசு பணமும் வேண்டாம்
காசினியில் பற்று வேண்டாம்
தூசு சூழ் துரோகிகள்
தொலைந்து மடிய வேண்டும்.

★

## தமிழ்மீது ஆணையிட்டு...!

— கைதையூர் காந்தன் —

நண்பா நானுனக் கிங்கொன்று கூறுகிறேன்
உண்மையான உள்ளமதில் கொண்டிடுவாய் அத்தனையும்
வெண்மை மனதுடனே வழிநடத்தும் தலைவர்தனை
நண்ணியே சென்றிடுவாய் நமதடிமை விலங்கொடிக்க
ஆண்டோம் தமிழர் நாம் அன்றொருநாள் ஈழம்தனை
ஈண்டே நாமிங்கு கள்ளத்தோணியென
ஆண்டிடுவோர் அழைக்கின்றார் அவரோடு சேர்ந்துஎமை
மண்டியிட வைக்க முனைகின்றார் மடையர் பலர்
அடியுண்டு நாமிங்கு அடிமைகளாய் வாழ்வதிலும்
மடியுண்டு நம்மொழிக்கு மாட்சியொன்று தந்திடுவோம்
குடியும் குலமுமாய் பெருமைகொள் நம்மொழிக்கு
விடிவுண்டு தயங்காதே அவ்வீணர்களை நம்பாதே
கண்டிடுவோம் தமிழ் ஈழம் காலமது தூரமில்லை
காண்டிட்டோம் தமிழ் ஈழம் எனத் தலைவர் கூறும்வரை
தாண்டிடேன் அவர் கூற்று என நீயும் இன்று முதல்
பூண்டிடுவாய் விரதமொன்று தமிழ்மீது ஆணையிட்டு



பாலகுலேந்திரன்,
சரசாலை.

கே: 'தனிநாடு' பெறுவது எப்படி?

ப: சிங்கள ஆட்சியாளர்களே தமிழர்களுக்கென 'தனிநாடு' ஒன்று உருவாவதற்கு ஏற்றவாய்ப்பை உண்டாக்கி வருகிறார்கள்!

ஃ

யோன்,
சண்டிலிப்பாய்.

கே: எங்கள் கிராமத்தில் நடைபெற்ற கலைவிழா வொன்றுக்கு தனக்கு அழைப்பு அனுப்பவில்லையென்று 'விநோத'க்குழந்தையொன்று அலறுகின்றதே. இக்குழந்தைக்கு எப்படித் தாலாட்டுவது?

ப: ''தொய்... தொய்... தொய்...'' என்று தாலாட்டுங்கள். அது சிங்களக் கலப்புக் குழந்தை!

ஃ

அ. அப்துல் லத்திப்,
திருகோணமலை.

கே: ஈழத்திருநாட்டில் இன்றைய முஸ்லிம்களின் நிலையென்ன?

ப: இஸ்லாமியர்கள் கொடுக்கும் வரிப்பணத்தில் பௌத்த மதம் அரசாங்கத்தினால் வளர்க்கப்படும். இஸ்லாம் மதத்துக்கு பௌத்த மதத்துக்கு இருக்கின்ற பாதுகாப்பும் உரிமைகளும், அரசியல் சட்டத்தில் கிடையாது! இந்த அநீதிகளைக் களைந்தெறிய இந்து, கிறிஸ்தவ தமிழ் மக்களுடன் சேர்ந்து இஸ்லாமியர்களும் போராட முன்வர வேண்டும்!

ஃ

மு. சண்முகநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாணம் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் தமிழில் முகவரியிட்ட பதிவுக் கடிதத்திற்கு ஆங்கிலத்தில் பற்றுச்சீட்டு வழங்குகிறார்கள். இதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்குமா?

ப: 'ஆங்கிலத்தில் கொடுக்காதே; சிங்களத்தில் மட்டும் கொடு' என்று அரசாங்கம் கூறக்கூடும்!

கே: யாழ்ப்பாண மாநகர சபையில் துவிச்சக்கரவண்டி இலக்கத் தகடுப் பற்றுச்சீட்டு ஆங்கிலத்தில் வழங்குகிறார்கள். இதை மாநகர முதல்வர் தடுப்பாரா?

ப: அவ்வளவுக்கு அவரிடம் தமிழ் உணர்ச்சி உண்டென்று நீங்கள் கருதினால் ஏமாந்துவிடுவீர்கள். மொழி, இன விடுதலை உணர்ச்சியுள்ளவர்களிடம் மாநகரத்தின் ஆட்சிப் பொறுப்பை யாழ் வாக்காளர்கள் அடுத்த தேர்தலிலாவது ஒப்படைக்கவேண்டும்!

ஃ

திருமதி தவ கிருபா,
மல்லாகம்.

கே: உரிமைப் போரினைத் தொடங்குவதற்கு முன்னர் தெற்கே குடியிருக்கும் தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்துவிட வேண்டும். அதன் பின் போராட்டத்தினை நடத்துவதுதான் சிறந்தது என்று சிலர் கூறுகின்றார்களே...... அதற்குத் தாங்கள் கூறும் பதில் என்ன?

ப: தெற்கே வாழும் தமிழர்கள் தமிழ் ஈழத்துக்குத் திரும்பிவிடத்தான் வேண்டும். [illegible] அவர்கள் எல்லோரும் இரும்புகிறவரையில் போராட்டத்தில் இறங்காமல் காத்திருக்கவும் முடியாது!

கே. தேவநாயகமும் தம்பிராசாவும் திருந்தி வந்தது போல், அருளம்பலம், குமாரசூரியர் போன்றவர்கள் திருந்தினால்...!

ப: தேவநாயகமும், தம்பிராசாவும் கடைசித் தருணத்தில் தங்கள் 'கற்பை' பாதுகாத்துவிட்டனர்; நீங்கள் குறிப்பிட்டவர்களோ தங்கள் கற்பைப் பறிகொடுத்துவிட்டவர்கள்! கற்பு ஒரு முறை போனால் போனது தான், மீளப் பெற முடியாதே!

கே: விடுதலைப் போருக்குப் பெண்களால் செய்யக்கூடிய உதவி என்ன?

ப: விடுதலை வீரர்களாக ஆண்களை உருவாக்க வேண்டியவர்களே பெண்கள் தானே!

ஃ

ந. கணேசமூர்த்தி,
மொந்திபுலம்,
காரைநகர்.

கே: 14, 15 வயது சிறுவர்கள் நாங்கள். தமிழர் கூட்டணியின் தொண்டர் படையிற் சேரலாமா?

ப: உங்கள் தமிழ் விடுதலை உணர்வை மேலும் வளர்த்துக்கொண்டு வாருங்கள் தம்பி! தொண்டர் படையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே சேரலாம்!

ஃ

'மலரரசி'
மயிலிட்டி.

கே: அரசாங்கத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதியொருவர் இலண்டனில் உள்ள தமிழர் மத்தியில் பேசும்போது 'இலண்டனில் சைவ ஆலயமொன்று கட்டுவதற்கு இலங்கை அரசிடமிருந்து நிதி பெற்று அனுப்புவதாகக் கூறினாராமே...... அனுப்பி விட்டாரா?

ப: அப்படி அங்குகூறிவிட்டு வந்தவர், இலங்கையில் காலடி வைத்ததும், அரசாங்கக்கட்சியிலிருந்துவிலகி விட்டாரே......! அரசாங்கத்தில் இருந்திருந்தால் அவரால் அதைச் செய்திருக்க முடியுமா என்று மட்டும் என்னை இப்போது கேட்டு விடாதீர்கள்!

கே: ஐந்து மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசினாராமே அண்ணா இராசதுரை இலண்டனில். என்ன பேசியிருப்பார்......?

ப: தமிழ் இலக்கியத்தையும், ஈழத் தமிழர் பிரச்சினையையும் சுவை சொட்ட ஒன்றுடன் ஒன்று கலந்து பொழிந்து தள்ளியிருப்பார்!

ஃ

க. யோகநாதன்
காரைக்காடு
வண்ணார்பண்ணை

கே:- தமிழகத்தில் இன்று அண்ணா உயிரோடிருந்தால்...?

ப: கழக ஆட்சியைக் கவிழ்த்து விடலாம் என்ற நிறைவேறாத ஆசை ஏனைய எதிர் கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்காது!

கே: 'மனச்சாட்சி' [illegible]டின் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: மனச்சாட்சியை எங்கோ தொலைத்து விட்டு சேலைத்தலைப்பைத் தடவிக் கொண்டிருக்கிறாராம்!

ஃ

ராஜகுருநாதன்
கொழும்பு-6

கே: தமிழர் கூட்டணித் தொண்டர் படையில் அரசாங்க ஊழியர்களும் சேரலாமா?

ப: சேரலாம்—போராட்டத்திலீடுபட்டு அதனால் வரும் கஷ்ட நஷ்டங்களையும் தாங்கிக் கொள்வதற்கு அவர்கள் தயார் என்றால்!

ஃ

'சிவா செல்லையா'
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா

கே: மாணவர்களை தவறான வழியில் தமிழர் கூட்டணியினர் இழுத்துச்செல்கின்றனர்'' என்று 'அருள்' அம்பலத்தார் சதிகாரத் தினகரனில் விளாசித்தள்ளி இருக்கின்றார். இவரைமாணவர்கள் கண்டால் செருப்பால் அடிப்பார்கள் என்று கூறுகின்றேன் — நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.

ப: நான் இதற்கு ஒன்றும் சொல்லத்தயாராக இல்லை; ஏனெனில் வன்முறைகளை நான் ஆதரிப்பவனுமல்ல; தட்டிக்கொடுப்பவனுமல்ல!

ஃ

செ. சோமநாதன்
மண்டைதீவு

கே: அன்னைத் தமிழை அழிக்க, அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் தியாகராசா போன்றோரை நாடு கடத்தினால் நல்லது என்று கருதுகிறேன் உங்கள் கருத்து?

ப: நாடுகடத்தினால் அந்த மனிதர் போய்ச்சேரும் நாட்டின் புனிதமும் கெட்டு அங்கும் ஒரு துரோகியாக அவர் மாறிவிட்டால் என்ன செய்வது? இன்னோர் நாட்டை நாம் ஏன் கெடுக்க வேண்டும்?

ஃ

வே. நவரத்தினம்,
சித்தங்கேணி.

கே: மாட்டினுக்கும் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினத்துக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இருவருமே தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதாடுபவர்கள்!

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழுக்கு ஆபத்தென்றால் அதைத்தடுத்திட தடந்தோள்கள் பல லட்சம் உண்டு"

## கலைஞர் கருணாநிதியின் எழுச்சி முழக்கம்!

'இந்தக் கழகத்தை நாங்கள் தொடங்கிய நேரத்தில் அரசு அமைக்க வேண்டும் என்று தொடங்கினோம். இந்தக் கழகத்திலே நாங்கள் எட்டணா கொடுத்து உறுப்பினராகச் சேர்ந்த நேரத்தில் எங்கள் அண்ணனின் தாள் பணிந்து அண்ணனே என்னை உனக்கு ஒப்படைத்திருக்கிறேன். எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக்கொள்; என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டுமா? அனுப்பு; நான் சிரித்த முகத்தோடு செல்கிறேன். தூக்குமேடைக்குச் செல்ல வேண்டுமா? உத்தரவிடு. தூங்குவது போலும் சாககாடு என்று உச்சரித்துக் கொண்டே செல்கின்றேன். விழுப்புண்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமா? ஆணையிடு' பெற்றுக்கொள்கிறேன்' என்று தான் இந்தக் கழகத்திலிருக்கின்ற ஒவ்வொரு தொண்டனும் அண்ணனின் தாள் பணிந்து கையெழுத்திட்டிருக்கிறானே அல்லாமல் ஏதோ ஒரு அரசு வரும். அந்த அரசிலே மந்திரிகளாக அமரலாம் என்று யாரும் கழகத்தில் இல்லை.

மந்திரிகளாக அமர்ந்தால் மோகன் குமாரமங்கலத்திற்கு, சுப்பிரமணியத்திற்கு மதிப்பு. மந்திரிகளாக இருந்தால் தான் மதிப்பு. ஆனால் எங்களுக்கு அது இல்லாமலே மதிப்பு. ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைக்கும் என்பதற்காக அல்ல — நாங்களெல்லாம் அமைச்சர்களாக வருவோம் என்பதற்காக அல்ல, கோட்டை கொத்தளத்திலே உட்காருவோம் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதல்ல இந்தக் கழகம்.

இந்தக் கழகத்தை 1949ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே நாங்கள் தொடங்கிய அந்தக் காலத்திலும் அதற்கு முன்பு என்னைப் பொறுத்தவரையிலே 1938ம் ஆண்டில் பெரியார் அவர்களதுபெரும் படையில் என்னை ஒப்படைத்துக் கொண்ட அந்தக்காலத்திலும் திராவிடர் கழகமாக இருந்து பணியாற்றிய அந்தக் காலத்திலும் இவற்றையெல்லாம் எதிர்பார்த்து இந்த இயக்கத்திலே நாங்கள் யாரும் சேர்ந்திடவில்லை

பெற்றோருடையகண்டிப்பு நண்பர்களுடைய உபதேசம் ஊரார்களின் உறுமல் உற்றுருடைய அறிவுரை ஏன் அங்கே போய்க்கெட்டுப் போகிறாய் என்று பலபேர் எங்களை தடுத்து நிறுத்திய கட்டங்கள் இவைகளையெல்லாம் தாண்டித்தான்-இவைகளையெல்லாம் நாங்கள் பொருட்படுத்தாமலே தான் தமிழ்ச் சமுதாயம் விழித்தெழ—தமிழ் மொழி காப்பாற்றப்பட பிற மொழி ஆதிக்கத்தால் எங்கள் இன்பத் தமிழுக்கு எவ்வித இடையூறும் வராமல் காப்பாற்ற இன்னுயிர் தந்திடுவோம். எம்முயிராம் செந்தமிழைக் காத்திடுவோம் என்று சூளுரைத்து இந்த இயக்கத்திலே எங்களை ஒப்படைத்துக் கொண்டோம். ஆகவே இந்த அரசு—இந்தப் பதவி நிலைக்க வேண்டும் என்பதற்காக இந்த இயக்கத்திற்கு வந்தவர்களல்ல நாங்கள்.

நாங்கள் மக்களை நாடி வருபவர்கள். மக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களைத் தேடி வருபவர்கள் நாங்கள். மக்கள் மத்தியிலே இருப்பவர்கள். நாங்கள் மந்திரியாகிவிட்டோம் நாலு கால் மண்டபத்திலே தான் இருப்போம் என்று சொன்னால் மக்களை நாடி வரத் தயங்குகிறவர்கள் என்று அர்த்தம். இதுதான் தத்துவம். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலக்கணம். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சித்தாந்தம்.

ஆகவே அரசுக்கட்டிலில் இருந்தாலும் ஆரண்யத்திற்கு அனுப்பப்பட்டாலும் நாங்கள் தமிழ் தமிழர் தமிழ்த்தாயகம் என்ற அந்த உச்சரிப்போடு அந்த உளமார்ந்த நினைவோடு எங்களது பணியினை என்றென்றும் ஆற்றிக்கொண்டிருப்போம்.

கழக அரசு அமைத்தது எதற்காக? அண்ணா 'என்ன சொன்னார்? 1965-ம் 66-ம் ஆண்டில என்ன பேசினார். இத்தனைபேர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திருக்கிறோம்; இத்தனை இடங்களில் மாநாடு நடத்தினோம்; இத்தனை இடங்களில கூட்டம் போட்டோம் என்று வெளிநாட்டுக்காரர்களிடம் சொன்னால், மத்தியிலே இருப்பவர்களிடம் சொன்னால் நம்ப மறுக்கிறார்கள். ஆகவே முன்னேற்றக் கழகம் பலமுள்ளதாக இருக்கிறது — முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை பலம் வாய்ந்தது மதிப்பு மிக்கது என்றால் மாநாடு போட்டுச் சொன்னால் போதாது — கூட்டம் போட்டுச் சொன்னால் போதாது; கழகம் பலம் வாய்ந்தது என்பதை நம்முடைய எண்ணிக்கையின் வாயிலாக சட்டமன்றத்தில், நாடாளுமன்றத்தில், எத்தனை இடங்கள் இருக்கின்றன என்கின்ற எண்ணிக்கையின் வாயிலாகக் காட்டியாகவேண்டும் என்று தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்டார்.



இது என்ன பிரமாதம் அந்த எண்ணிக்கையையும் காட்டுகிறோம். தமிழுக்கு ஆபத்து வந்தால் தடுத்திடத் தடந்தோள்கள்இலட்சக்கணக்கிலே உண்டு. அதை நடத்திச் செல்கின்றதானைத் தலைவனாக எங்கள் அண்ணன் உண்டு என்பதை அகிலம் அறியச் செய்கிறோம் டில்லிப் பட்டணத்திற்குப் புரிய வைக்கிறோம். என்றுதான் 67ம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள் அரசுக் கட்டிலிலே ஏற்றிவைத்தார்கள்.

எல்லாம் இருக்கிறது— தமிழ்நாட்டிலே! எல்லா வளமும் இருக்கிறது. மண் வளமும் இருக்கிறது. மனவளம் உண்டு. நீர்வளம் உண்டு. இவ்வளவு வளங்கள் இருந்தும் இவைகளையெல்லாம் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்கிற அதிகாரம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடையாது. ஒவ்வொரு மாநிலமும் தங்கள் மாநிலத்தில் வாழ்க்கையில் வளம் காண வேண்டுமென்றால் அதிக அதிகாரம் பெற்றதாக இருக்கவேண்டும். அதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி. மாநில சுயாட்சி பெற இறுதிவரை போராடுவோம். அதற்கு அன்பான தமிழ் மக்களாகிய உங்கள் ஆதரவுவேண்டும்.

## என்றுமடியுமிந்த அடிமையின் மோகம்?

(1) இதுவரை காலமும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் விளையாட்டுப் போட்டிகளில் தேசிய கீதம் பாடப்படுவதில்லை. இம்முறை அதிபரின் அடிமைப் புத்தியினால் தேசிய கீதம் பாட ஒழுங்கு பண்ணப்பட்டது. அவ்வாறே அன்று தேசிய கீதம் பாட ஆரம்பித்ததும், அதுவரை அமைதியுடனிருந்த மாணவர்கள் அனைவரும் கூச்சலிட்டுக்கொண்டு கிளம்பவே, தேசிய கீதம் ஆரம்பித்த உடனேயே நிறுத்தப்பட்டு விட்டது.

(2) அன்றைய தினத்தில் பாடசாலைக்கீதமும் ஆங்கில மொழியில் பாட அதிபர் ஒழுங்குபண்ணியிருந்தார். ஆனால் இரு தமிழ் உணர்ச்சி மிக்க ஆசிரியர்களின் அகோர எதிர்ப்பினால் இத்திட்டமும் தவிடுபொடியாகியது.

(3) விளையாட்டுப்போட்டியன்று சகல அறிவிப்புகளும் (announcements) ஆங்கிலத்திலேயே நடைபெற இருந்தது. ஆனால் மேற் குறிப்பிட்ட இரு ஆசிரியர்களின் பகீரதப்பிரயத்தனத்தாலேயே இடைவேளையின் பின் அறிவித்தல்கள் தமிழில் தரப்பட்டன.

இவற்றினால் எல்லாம், ஆங்கில, சிங்கள மோகம் கொண்ட அதிபருக்கு 'தமிழ்' என்றதும் கசப்புணர்வு கூடியிருக்க வேண்டுமோ என்னவோ தமிழ் வெறுப்பை உக்கிரமாகக் காட்டத் தொடங்கியுள்ளாராம்.

க. பொ. த. (உயர்தர) வகுப்புகளில் எல்லாம் பாடசாலை வராதோர் பட்டியல் [illegible] தனை [illegible] ஆங்கிலத்தில் எழுதும்படி வகுப்புச் சட்டாம் பிள்ளைகட்கு கடும்

## தெறித்த முத்துக்கள்...!

### யார் முதலாளி?

"தந்தை செல்வாவும், நானும், நண்பர் சிவாவும் ஆலாலுவும், ஏன் கூட்டணியிலர் அனைவருமே முதலாளிகளாம்... இப்படிக் கூறுகிறார் தோழர் வீ. பி. அவரது சகபாடி பீட்டர் கெனமன் கொள்ளுப்பிட்டியில் கட்டியிருக்கின்ற வீட்டைப்பார்த்துவிட்டுக் கூறட்டும் யார்முதலாளி என்று...!

— பண்டத்தரிப்பில் நாவலர் அமிர்.

### மக்கள் குழுவல்ல.... மந்தி (ரி) குழு!

"அதிகாரப் பரவலென்பது மக்களால் மக்கள் மத்தியிலே ஆக்கப்படல் வேண்டும். ஆனால் இந்நாட்டிலே மந்திரியே குழுக்களை நியமிக்கின்றார். கூட்டுறவு இயக்கங்களிலே கொள்ளையடிப்பவர்களைப் பார்த்துப போட்டுவிட்டு மக்களியக்கமாம்! இதை மக்கள் குழுவல்ல... மந்தி(ரி) குழுவென்றே சொல்ல வேண்டும்!

— நல்லூர் முத்திரைச் சந்தையில் நாவலர் அமிர்!

### அம்மையார் கொம்பனி...!.

இடதுசாரிகளில் குறிப்பாக கம்யூனிஸ்டுகள் தங்கள் மூளையை "சேர்விஸ்" செய்வதற்காக மாஸ்கோவிற்கும், சிலர் சீனாவிற்கும், இன்னும் சிலர் யூகோஸ்லேவியாவிற்கும் சென்று தான் தங்கள் மூளையைத் துப்பரவு செய்தார்கள். இன்றோ அவர்கள் எங்கும் போகவேண்டியதில்லை அம்மையாரின் கொம்பனியில் சேர்விஸ் செய்துவிட்டால் போதுமென்றே திருப்தியடைந்திருக்கிறார்கள்.

— பண்டத்தரிப்பில் நாவலா அமிர்.

வீ. பி. போன்றோர் இன்று மாஸ்கோவிற்குச் சென்று அவர்களது அரசியல் வழிகாட்டியான லெனினின் சிலைக்கு அருகில் சென்றால் இவர்களைக்கண்டு அது வெறும் எலும்புக்கூடாக இருந்தாலும் மறுபக்கம் புரண்டுவிடும். காரணம் அவர் காட்டிய சித்தாந்தத்தையே இன்று குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள்."

— முத்திரைச்சந்தையில் நாவலர் அமிர்.

தமிழினத்தின் உரிமைகளை செல்வநாயகமோ, அல்லது தமிழர் கூட்டணியினரோதான் பெற்றுத் தரவேண்டுமென்பதல்ல... வீ. பி.யோ, அல்லது குமாரசூரியரோ, முடிந்தால் தியாகராசாவோ பெற்றுத்தரட்டும். எமது இலட்சியம் தமிழினம் உரிமையைப் பெறவேண்டுமென்பதுதான்...!

— பண்டத்தரிப்பில் அடலேறு ஆலாலு கர்ச்சனை

தமிழினத்தின் மத்தியில் மட்டுமல்ல தேசியப் பேரவையிலும் கர்ச்சனைபுரியவேண்டிய இளஞ் சிங்கமொன்று வெளியில் நிற்கின்றது. அதுதான் தம்பி அமிர். ஆனால் அங்கோ படுபாதகர்களும் துரோகிகளும் வீற்றிருந்து இனத் துரோகம் புரிகின்றார்கள். இந்நிலைக்கு வழிவகுத்த மக்கள் நிச்சயம் நோன்பு இருக்கவேண்டும்.

— பண்டத்தரிப்பில் ஆர் என். சிவப்பிரகாசம்.

### "திரீ இன் வண் ஒயில்!"

"தமிழ்ப் பிரதேசங்களில் நீதிமன்றங்களில் தமிழ் இடம் பெற்றுள்ளது என்று அறிக்கை விட்டார் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா. இப்படி அறிக்கை விட்ட அடுத்தநாள் தமிழ் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்கள், கிராமக் கோடுகளுக்கு சிங்களம் மட்டும் தெரிந்த நாரிமணிகள் சிங்களத் தட்டச்சுகளுடன் வந்திறங்கியுள்ளனர். அவர்களுக்கு தமிழோ ஆங்கிலமோ தெரியாததால் வந்த வேலையை விட்டு விட்டு கூடிக்குலாவி வெட்டிப் பேச்சுப் பேசி சும்மா இருந்து சம்பளம் பெறுகின்றார்கள். இதை பீலிக்ஸ் மறைக்க முடியாது. இவர் பல மந்திரிப் பதவிகளை தன்னுடன் சொந்தமாக்கி வைத்துள்ளார். இவர் தனக்குள் வைத்திருக்கும் மந்திரிப் பதவிகளைப் பார்க்கும்போது திரீ இன் வண் ஒயிலின் ஞாபகம்தான் எனக்கு வருகிறது."

— யாழ் கூட்டத்தில் தளபதி அமிர்.

உத்தரவிட்டார். அவர்களும் அவரின் எதிர்ப்புக்கு அஞ்சி ஆங்கிலத்திலேயே எழுத ஆரம்பித்து விட்டனர். அன்று உயர்தர வகுப்பு மாணவர்களை எல்லாம் கூட்டி நியாயமற்றகாரணங்களையெல்லாம் காட்டி தமிழை வகுப்பு அறையினுள் பாவிப்பதனால் மட்டும் வளர்ந்து விடாது என்றெல்லாம் ஏதோ கடுமையாகப் பேசினாராம்.

இவற்றினாலெல்லாம் தமிழுணர்ச்சி மிகுந்த மாணவர்கள் செய்வதறியாது திகைக்கின்றார்கள். அதிபர்.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# குமாரசூரியரின் குதர்க்கவாதம்!

ஓர் இனம் தனது விடுதலையை எப்படியும் பெற்றே தீருவது என்று உறுதிகொண்டு எழும்பும்போது அந்த இனத்தின் விடுதலை உணர்ச்சியையும், ஆவேசத்தையும் நசுக்கவும், கிள்ளியெறியவும் பல்வேறு தந்திரோபாயங்களையும் ஆளும் வர்க்கத்தினர் கையாள்வதுண்டு.

விடுதலை உணர்ச்சியையும், உரிமை வேட்கையையும் சுதந்திரப் போராட்டத்தையும் பலவீனப்படுத்தி விடுதலைக்காகப் போராடும் மக்களின் உள்ளங்களை குழப்பிவிடக்கூடிய செய்திகளைப் பரப்புவதும் ஆளும் வர்க்கத்தினரும், அவர்களது அடியாட்களும் பின்பற்றும் பல்வேறு தந்திரோபாயங்களில் ஒன்றாகும்.

இந்திய சுதந்திரத்துக்காக மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் போதுகூட ஒரு கட்டத்தில் வெள்ளையன் கேட்டான் ''சரி, நாங்கள் சுதந்திரத்தை தந்தாலும், உங்களுக்கு ஆளத்தெரியாதே... எப்படி ஆளப்போகிறீர்கள்'' என்று.

இன்று ஈழத்தில் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காக குரல் கொடுத்து வருகிறார்கள். தங்கள் தமிழ் பிரதேசத்தில் தங்களைத் தாங்களே ஆளவேண்டும் — தமிழ் ஈழத்துக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று உறுதியுடன் கோரி வருகிறார்கள். இந்த இலட்சியத்தையடைய களத்தில் குதிக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

இதுகாலவரை ஒரு கட்சியின் கோரிக்கையாக இருந்து வந்த தமிழ்த் தன்னாட்சிக் கோரிக்கை — இன்று முழுத் தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட, ஒருமித்த கோரிக்கையாகிவிட்டது.

இந்த நிலையைக்கண்டு ஆட்சியாளர்கள் பதறுகிறார்கள்; பரபரப்படைகிறார்கள்; பயமுறுத்துகிறார்கள்; தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சியை பலவீனப்படுத்த என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து வருகிறார்கள்!

ஒற்றை ஆட்சியைப்பாதுகாக்க சில ஆயுதங்கள் தேவைப்படுகிறது என்று அச்சுறுத்தியிருக்கிறார் பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் என்றால் — தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக் கோரிக்கையை பலவீனப்படுத்தும் நோக்குடன், தமிழ் மக்களின் உள்ளங்களைக் குழப்பிவிடும் அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார் தமிழ் அமைச்சரான குமாரசூரியர்.

ஆம், ஆகஸ்ட் 13ம் திகதி வெளிவந்த ஏரிக்கரையின் தமிழ்ப் பத்திரிகையில் திரு. குமாரசூரியர் வெளியிட்டுள்ள அறிக்கையையே இங்கு குறிப்பிடுகிறோம். அந்த அறிக்கையில் இலங்கையில் வாழும் 34 இலட்சம் தமிழ் பேசும் மக்களில் 23 இலட்சம் பேர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இருக்கிறார்கள் என்றும், இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உரிமைப் போராட்டம் நடத்தினால், வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களை அது உரிமையற்றோர் ஆக்கிவிடும் என்றும் புலம்பியிருக்கிறார் குமாரசூரியர்.

திரு. குமாரசூரியரின் இந்த அறிக்கை தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சியை பலவீனப்படுத்தும் நோக்கத்துடனேயே வெளியிடப்பட்டிருக்கிறது என்பது தெளிவானது. ஆனால் அரசியல் அறிந்தவர்கள் — ஏனைய நாடுகளின் விடுதலைப் போர் வரலாறுகளை உணர்ந்தவர்கள் — இத்தகைய அறிக்கைகளால் ஏமாந்து போய் விடமாட்டார்கள்.

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அல்லாத மாகாணங்களில் வதியும் இருபத்திரண்டு இலட்சம் மக்களுள் அதிகப்படி பெரும்பான்மையோர் கடந்த 25, 30 ஆண்டுகளாக அரசியல் அநாதைகளாகவே வாழ்ந்துவருகின்றனர். இதற்கு முக்கியமான காரணம் தமிழ்பேசும் மக்கள் அகில இலங்கை ரீதியான அரசியல் கட்சிகளில் அங்கம்வகித்துச் சேராமல் விட்டதேயாகும்—'' என்கிறார் குமாரசூரியர்.

தமிழ் மக்கள் இந்நாட்டில் அரசியல் அநாதைகளாகவே வாழ்ந்து வருகிறார்கள் என்கின்ற நமது கூற்றை இப்போதாவது அமைச்சர் குமாரசூரியர் ஒப்புக்கொண்டு விட்டதற்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் தமிழ் மக்களுக்கு இந்நாட்டில், சிங்கள மக்களுடன் சமத்துவம் இருப்பதாக இது நாள் வரை கூறிவந்தவர் அமைச்சர் குமாரசூரியர். ஆனால் தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டதற்கு அமைச்சர் கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல—

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்களில் உரிமை மறுக்கப்பட்டு அரசியல் அநாதைகளாக்கப்பட்டு இருப்பவர்கள் 15 இலட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்தாம். அமைச்சர் குமாரசூரியருக்கு பழைய அரசியல் வரலாறு புரியாவிட்டால் நாம் எடுத்துக் கூறுகிறோம்.

இந்தப் பதினைந்து இலட்சம் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களும் அவர்களது தலைவர்களும் இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தலின்போது, 1947ம் ஆண்டு— குமாரசூரியர் கூறுவதுபோல, அகில இலங்கை கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளையே வெளிவெளியாக ஆதரித்து நின்றிருக்கிறார்கள். மற்றோர் அகில இலங்கைக் கட்சியென்று கூறப்படும் யூ. என். பி. இந்த மக்களது அரசியல் உரிமைகளை அபகரிக்கும் பிரஜாவுரிமைச் சட்டங்களை கொண்டுவந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எனவே தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக வாழ்கிறார்கள் என்பதை இப்போது ஒப்புக்கொண்டுள்ள தமிழ் அமைச்சர் அதற்குக் கண்டுபிடித்துள்ள காரணம் தவறானது; ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல—

தமிழ் மக்கள் இந்நாட்டில் இன்று அரசியல் அநாதைகளாக வாழ்கிறார்கள் என்றால் — அதற்கு ஒரே காரணம் தமிழ் மக்களை ஆளப்படும் மக்களாகவும் சிங்கள மக்களை ஆளும் மக்களாகவும் ஆக்கிவைத்திருக்கும் இன்றைய ஒற்றையாட்சி அரசமைப்புத் தான். ஒற்றையாட்சி அரசியலமைப்பு, தமிழ் மக்களை என்றென்றும் அடிமைகளாகவும், சிங்கள மக்களை என்றென்றும் எசமானர்களாகவும் வைத்திருக்க வகைசெய்யும் ஒரு பாசிச அமைப்பாகும்.

இந்த அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டு, சிங்கள மக்களைப் போல, தமிழ்பேசும் மக்களும் ஆளும் இனமாக மாறினால் மட்டுமே, தமிழ் மக்களின் அடிமைநிலை அகலும்—தமிழினம் தலைநிமிர்ந்து இந்நாட்டில் வாழமுடியும். இதுதான் யதார்த்த நிலை. இன்னும் சில காலத்தின் பின்னராவது அமைச்சர் குமாரசூரியர் இந்த உண்மையைப் புரிந்துகொள்வாரென்று நம்புகிறோம்.

தமிழ்ப்பிரதேசத்தில் தமிழினம் சுயாட்சியை நிறுவி, தம்மைத்தாமே ஆளும் நிலை ஏற்படுமானால் சிங்களப் பிரதேசத்தில், தமிழர்கள் அரசியல் அநாதைகளாக வாழும் நிலை ஒருபோதுமே நீடிக்க முடியாது.

உலகெலாம் பரந்து சிதறி அடிமைகளாக வாழ்ந்து கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளான யூதர்கள், தங்களுக்கென 'இஸ்ரேல்' என்னும் ஓர் தாயகத்தை உருவாக்கிய பின்னர்தான், அவர்களது பெருமையை உலகம் உணர்ந்து மதித்து வருகிறது. 'இஸ்ரேல்' எனும் நாட்டை உருவாக்க அவர்கள் போராடியபோது, வெளி நாடுகளில் பரந்து வாழ்ந்த தமது இனத்தவர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று யூதர்கள் பின் வாங்கியதில்லை.

ஜின்னா, முஸ்லிம் மக்களுக்கு 'பாகிஸ்தான்' கேட்டுப்போராடிய போது— அவர் கேட்ட பாகிஸ்தானில் இருந்த முஸ்லிம்களை விட, பாகிஸ்தானுக்கு வெளியே வாழ்ந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை கூடுதலாகத்தான் இருந்தது. அதனால், அவர் பாகிஸ்தான் கோரிக்கையைவிட்டு விடவில்லை.

எனவே, ஈழத்திலும், தமிழ்பேசும் இனம் தனது நாட்டில், தனது சொந்த ஆட்சியை நிறுவிக்கொள்வதொன்றின் மூலமே தமிழன் இந்நாட்டில் சுயமரியாதையுடன், தலைநிமிர்ந்து வாழமுடியும்—அடிமை நிலையை அகற்றமுடியும். இந்த உண்மையை தமிழ் மக்கள் எப்போதோ உணர்ந்து கொண்டு விட்டார்கள்—தமிழரான குமாரசூரியரும் உணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

# நல்லூர் கந்தன் விழாவின்போது யாழ் நகரில் களியாட்ட விழாவா?

## இந்துக்களின் மனம் புண்படும்படி யாழ் மேயர் நடக்கலாமா?

சிங்களப் போயா நாளன்று பெளத்தர்கள் அந்த நாளைப் புனிதமாக அனுட்டிப்பதற்காக அந்த நாள் பொது விடுமுறை நாளாக்கப்பட்டிருப்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால் அதற்காக அந்த நாளில் பிற மதத்தவர்கள் கூட இறைச்சி சாப்பிடக் கூடாது, சினிமாப் பார்க்கக் கூடாது, மதுபானம் அருந்தக் கூடாது, ஏன் கலை கலாச்சார நிகழ்ச்சிகளைத் தானும் நடத்தக் கூடாதென்று, இறைச்சிக் கடைகளையும், படமாளிகைகளையும், மதுபானக் கடைகள் தவறணைகளையும் மூடவேண்டுமென்றும் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் கூட இடம்பெறக் கூடாது போயா நாளில் என்றும் சட்டம் கொண்டு வந்து கண்டிப்பாக அமுல் நடத்தவும் வேண்டுமா? பிற மதத்தினர் இனத்தினர் எதற்காக நிந்திக்கப்பட வேண்டும் பெளத்தர்கள் அந்நாளில் ஆசாரமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காக!

இப்படிப்பட்ட அடாத்தான சட்டத்தைஅனுசரிக்க வேண்டுமென்பதற்காக யாழ்ப்பாண மாநகரசபை கூட பொது மக்களின் அபிமானத்தையும் பெரும் ஆதரவையும் பெற்ற தனது ஒரே கலை நிகழ்ச்சியாகிய பௌர்ணமி நாள்' கலை நிகழ்ச்சியைக் கூட நிறுத்திவிட்டுள்ளது.

இப்படிச் செய்திருக்கும் யாழ் மாநகர மேயர்தான் இந்துக்களினது முருக பக்தர்களதும் மனசு புண்ணாகும்படியாக நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவகாலத்தில் யாழ் நகரில் 'யாழ் விநோத களியாட்டு விழாவை' நடத்த ஒழுங்குகள் செய்து வருகிறார். 'களியாட்டு விழாவில்' களரிகள், மதுபானக் கடைகள் இடம் பெறாமலாவது இருக்க அவர் பார்த்துக் கொள்வரா.?

சினிமா நட்சத்திரங்களின் படையெடுப்பு பக்த கோடிகளை 'யாழ். விநோத களியாட்டுவிழாப் பக்கம் திசை திருப்பி கவர்ந்து இழுக்காதா?

பெளத்தர்களது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் மேயர் —'பௌர்ணமி நாள் கலை நிகழ்ச்சிகளைக்' கைவிட்ட மேயர் இந்து மக்களிடம் முருகபக்தர்களிடம் மட்டும் ஏன் மாற்றாந் தாய் மனப்பான்மையைக் காட்ட வேண்டும்?

—மணி

## யாழ் நகருக்கு நல்ல காலம் வருகுது..!

பல நாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவானாம்! லஞ்சக் கமிஷனின் வலை வீச்சில் ஒரு மீன் இப்போது சிக்கிவிட்டதாம் இன்னும் இரு பெரிய மீன்கள் மீதும் வலை வீசப்பட்டுள்ளதாம். 'தலைமை' மீனும், 'டெப்பியூட்டி' எனப்படும் மீனும் விரைவில் சிக்கிக்கொள்ள விருக்கிறதாம்—யாழ்ப்பாண மாநகருக்கு இனி நல்ல காலம் வருகுது...... வருகுது...!

—யாழ்நகரில் ஒரு குடுகுடுப்பைக்காரனின் சோதிடம்!

# பீக்கிங் கம்யூனிஸ்ட் பிளவின் எதிரொலி

இலங்கைக் கம்யூனிஸ்ட் (பீகிங்) கட்சியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பிளவினைத் தொடர்ந்து வடபகுதியில் பல காலமாக கம்யூனிஸ ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த ஒரு சன சமூக நிலைய நிர்வாகத்திலும் பலத்த பிளவு ஏற்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகித்து வந்த பலர் ராஜிநாமாச் செய்துள்ளனர்.

இது காலவரையும் கட்சியை வளர்ப்பதையே லட்சியமாகக் கொண்டு, சனசமூக நிலையத்தை வளர்த்து வந்தவர்களின் அம்பலங்கள் யாவும் இன்று அம்பலப் படுத்தப்பட்டுவிட்டன. அபிப்பிராய பேதம் காரணமாக விலகியவர்களின் கேள்விகளுக்கு பொது மக்களுக்குச் சேவை புரிவோர் என்ற போலித் தலைவர்கள் வாயடைத்து நின்றனர். பொது மக்களுக்காகச் சனசமூக நிலையமா? அல்லது கட்சிக்காகவா என்று கொதித்தெழுகிறார்கள் பொது மக்கள்.

நிலைய மண்டபத்தில் மாட்டப்பட்டிருக்கும் கம்யூனிச சித்தாந்தவாதிகளின் படங்களை உடனடியாக அப்புறப்படுத்தி அவை இருந்த இடத்தில் தமிழ்த் தலைவர்களின் படங்களை மாட்ட வேண்டும் என்றும், நூல் நிலையத்தில் 'தொழிலாளி' பத்திரிகை இடம் பெறக் கூடாதெனவும் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

தொழிலாளி பத்திரிகை இடம் பெறாமல் சகல பத்திரிகைகளும் (சுதந்திரன்) உட்பட இடம் பெறவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

## பிச்சை நிதி எங்கே?

கடந்த வருடம் யாழ் மேயர் தனது பிறந்த நாளைக் கோலாகலமாகக்கொண்டாடினார். விழாக்கள் பல நடத்தினார். வேடிக்கை பல காட்டினார். பிச்சைக்காரருக்கு வாழ்வு அளிக்கப் போகிறேன் என்று கலைஞர் கருணாநிதியை 'காப்பி' அடித்து பிச்சைக்காரர் நிவாரண நிதியும் சேர்த்தார்.

இந்தப் பிச்சைக்காரர் நிவாரண நிதிக்கு சேர்ந்த பணம் எவ்வளவு? நிதியின் நிலை என்னவாச்சு? எங்கே எங்களுக்கு நிவாரணம் என்று யாழ்ப்பாணத்து தெருவோரங்களில் திரியும் பிச்சைக்காரர்கள் கேட்கிறார்கள்.

இந்தப் பிச்சைக்காரர்கள் எல்லாம் மேயரின் வீட்டுக்குச் சென்று முற்றுகை இடப்போவதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழர் நாடாம் மட்டுமாநகரில்

# சிங்களப் பெயரை வீதிக்குச் சூட்டுவதா?

## 7-ம், 8-ம் வட்டார மக்கள் மேயரிடம் கடும் கண்டனம்!

மட்டக்களப்பு மாநகர சபையின் 7ம் 8ம் வட்டார எல்லை வீதியாகிய வெயிலிக் குறுக்கு வீதி என்னும் பெயர் கொண்ட வீதியை 'சர்ணசில்வா' வீதி என பெயர் மாற்றம் செய்வதற்கு 7ம் 8ம் வட்டாரப் பொது மக்கள் பெரும் எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக 7ப் 8ம் வட்டாரத்தை சேர்ந்த தொண்ணூறு சத விகிதமான பொது மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் மட்டுநகர் முதல்வர் ஆகியோரிடம் கையளித்துள்ளார்கள்.

வெகுஜன தொடர்போ அல்லது மட்டக்களப்பு மண்ணிலோ பிறக்காத வரும் பொது மக்களுக்காக எந்த ஒரு பொதுக் காரியத்திலும் ஈடுபடாதவருமான ஒருவரின் பெயரில் வீதியை அலங்கரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியை உடனடியாக நிறுத்திவிடும் படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை ஒரு வீதியின் பெயரை மாற்றுவதாக இருந்தால் அந்த வட்டார பொது மக்களின் அபிப்பிராயத்தைப்பொறுத்தே செய்யவேண்டும் அப்படிச் செயல்படுவதே ஜனநாயக மரபு. இந்த மரபு எந்த அளவில் இப்பெயர் மாற்றும் திட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதே மாநகர சபை முதல்வர் கவனிக்க வேண்டிய கடமை ஆகும்.

குறிப்பிட்ட வீதிக்கு இடப்படும் பெயர் சர்ணலிஸ் டீ சில்வா. 8ம் வட்டார அங்கத்தவரின் மாமனர் இறந்ததும் அவரின் பணத்தை வைத்துக் கொண்டு நாளுக்கொரு நாடகம் ஆடுபவர் இவர். இவரின் கையாளாகிய இன்னெரு அங்கத்தவர் மூலமே இப்பிரேரணையைக்கொண்டு வந்துள்ளார்.

தமிழரசுக்கட்சி ஆதரவுடனும் தமிழ் ஆர்வம் உள்ள வாலிபர்களாலும் இவ் வட்டாரத்தில் வெற்றி கண்ட இவ்வங்கத்தவர் மேயர் தேர்தலின் போது ஒரு திடீர் மந்திரிக்குக் காவடி எடுத்து ஜே. பி. பட்டம் பெற்றது ஒரு பழைய கதை அந்த நாற்றத்தைக் கிளற நாம் விரும்பவில்லை.

ஆனால் நெற்றியில் திருநீறு; முழுச்சாயிபக்தன்; வாயில் சிவ சிவ; பெயர் மாற்றமோ சிங்களத்தில் இப்படி ஒரு பெயர் தேவை தானு? இவர் செய்யப் போவது தமிழ் இனத்திற்கே முழுத்துரோகம் இத்துரோகமான செயலுக்கு நிச்சயம் மாநகர முதல்வர் இடமளிக்கமாட்டார் என்று மாநகர வாக்காளர்கள் எதிர்பார்க்கிறுர்கள்.

### வீரத்தாயருக்கு வீரத்தாயின் அறை கூவல்!

''வீரத்தாய் மார்களே! உங்கள் வயிற்றில் இருந்துதான் குழந்தைகள் அவதரிக்கின்றன. அக்குழந்தைகளுக்கு சுதந்திர வேட்கையை தினமும் ஊட்டுங்கள்! போர்களம் சென்று உங்களால் போராட முடியா விட்டால், உங்கள் பிள்ளைகள் ஆணுக இருந்தாலும் சரி, பெண்ணுக இருந்தாலும் சரி போர்க்களத்துக்கு அனுப்புங்கள்! போரில் உங்கள் மகனே, மகளோ மடிந்து விடலாம்: இதனை உங்கள் குடும்பத்தின் இழப்பு என்று எண்ணி விடாதீர்கள்; தமிழுரிமை பெறுவதற்காக என் மகன் போர்க்களம்சென்று மடிந்தான் என்ருல், அதுதான் தியாகம் என்று எண்ணுங்கள்!''

—திருமதி மங்கையர்க்கரசி அமிர்

(நல்லூர் கூட்டத்தில்)

### வாரீர் வாரீர்

இருல்குழி – சிவகுருநாதன்

அன்றொரு நாள் அன்னையுந்தன் மடியிருத்தி
அமுதப்பால் தந்தெனக்கு வீரமூட்டி
சென்றிடுக! செந்தமிழைக் காக்கவென்று
செப்பியதை என்வாழ்வில் மறப்பேனுனல்
குன்றனைய உனது புகழ் கொள்கை வீரம்
கொன்றவனய் இவ்வுலகில் அழிவேனன்றே
தென்றமிழின் சுவையெல்லாம் ஒருங்கு கூட்டி
தேன்போல பிறர்க்களித்து வாழ்வேனம்மா.

ஆராரோ பாடியெனைத் தொட்டிலேற்றி
அழகு தமிழ் மொழியதனல் பாவிசைத்து
கூரான அறிவொளிகள் தந்தவுன்னைக்
கொன்றிடவும் என்நெஞ்சம் ஒப்புமாமோ?
சீரான அணிகுலுங்கச் சிறப்பாய்முன்னம்
சிங்காசனத் திருந்தவுனை எத்தர்கூட்டம்
கூரான வேல் கொண்டு குத்தும்போது
கொள்கை யற்ற மரக்கட்டை ஆகுவேனே?!!

விழியசைந்தால் எத்தரெலாம் வீழ்வாருந்தன்
வீரமரபின் திறனை அறிவாரன்றே
குழி தோண்டிக் கொள்கையதைப் புதைப்பார்தானும்
கொஞ்சுமொழித் தமிழுக்காய் இணைவாரம்மா
பழிக் கறைகள் எம்மினத்தைப் படுத்திவாழும்
பாதகரும் பண்பினணி தொடர்வாரன்றே
இழிச் செயல்கள் இன்றனைந்து இன்புபூக்க
இயலிசையை நாம் பாடி எழுவோம்வாரீர்!

மார்பினிலே காயங்களேற்றி எங்கள்
மறத்தமிழன் குருதியெலாம் பாய்ந்து ஓட
போர் முனையில் தமிழ் மானம் காப்போம் நாமே
புறமுதுகிட்டோடி மாழா நின்றே
வேர் அறுப்போம் நஞ்சூட்டும் எத்தர் தம்மின்
வேங்கையதாய் பாய்ந்து தமிழ் காப்போம் இன்றே
சீர் பூட்டிச் செந்தமிழை அரசிலேற்றி
சிறப்போடு வாழ்ந்திடுவோம் வாரீர் வாரீர்.

# வி. பி. அவர்களே! விழல் அறிக்கை வேண்டாம்!

# வீர இளைஞர்களது ஆதரவு தமிழர் கூட்டணிக்கே!

கடந்த பல வாரங்களாகத் தமிழர் கூட்டணி பற்றியும், அது செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், கூட்டணி சார்பாக நின்று சில செய்திகளை வெளியிட்டு வந்த வி. பி. பழையபடி தன்னுடைய; எச்சில் இலை நக்கும் குணத்தை வெளிக்காட்ட ஆரம்பித்துவிட்டார். சில தினங்களின் முன்னர் தினகரனில் அவர், கூட்டணிபற்றி வெளியிட்ட அபிப்பிராயங்களை வாசித்த போது அவரது அடிப்படைக் கருத்துகள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்துவிட்டன.

கடந்த 70ம் ஆண்டின் நவம்பர் 22ம் திகதியின் பின்னர், தமிழ் மாணவ, இளைஞர் சமுதாயத்தின் மாபெரும் விரோதியாகவும், தமிழினத்துரோகியாவும் மாறிய வி. பி. தன்னைப் பெரியவனுக இன்னும் எண்ணினுல், அது வெறும் ஏமாற்றத்தையே அவருக்குக் கொடுக்கமுடியும்.

தமிழ் மாணவர் மீது தரப்படுத்தல் என்ற பாகுபாடு சுமத்தப்பட்டபோது, திரண்டெழுந்த மாணவர்கள்; தமிழ் மாணவர் பேரவை என்ற அணியின்கீழ் ஒன்றுபட்டுத் தமக்கிழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து, ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தத் தீர்மானம்செய்து, அதற்கான உத்தரவினைப் பெறுவதற்கு வட மாநிலப் பொலீஸ் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று அனுமதி கோரியபோது; ''இக் கூட்டத்தினர் ஒரு பயங்கரவாத இயக்கத்தினர், இவர்களுக்குக் கூட்ட உத்தரவும், ஊர்வல அனுமதியும் கொடுக்க வேண்டாம்'' என்று பொலீஸ் அதிபரிடம் கூறி, ஊர்வல அனுமதி கிடைப்பதைத் தடைசெய்ய முயன்று, எம்மிளஞ் சிங்கக் குருளையரின் மனத்திலே என்றும் மறக்கமுடியாத துரோகியாக மாறியவர் மீண்டும் தன்னைப் பற்றிப் பெரியவன் என்று சொல்லிக்கொண்டு அறிக்கைகள் விட ஆரம்பித்தால் அதை யாரையா சட்டை செய்வது?

தரப்படுத்தல் சம்பந்தமாக இந்த மாபெரும் அநீதியைக் கண்டித்துப் பெரிய பெரிய அறிஞர்களும் அரசியல் வாதிகளும், ஏன் சமதர்மவாதப் புலிகள்கூட அறிக்கைகள் விடுத்தபோது, எந்தவிதமான அறிக்கைகளோ பேச்சுக்களோ இல்லாமல், சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் எச்சில் இலை எப்போது விழும் என்று ஏங்கித் தவித்து நின்ற இவர் மீண்டும் அறிக்கைவிடத் தொடங்கியுள்ளமை ஒரு கேலிக்கூத்து.

மாணவர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்ட வி. பி, 70ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி நடைபெற்ற, கம்யூனிசக் கட்சியின் வட பிரதேச இரகசியக் கூட்டத்திலே, ''நான் என்ன தவறு செய்தேன்? ஏன் என்னை மாணவர்கள் வைகின்றுர்கள்? ஏன் என்னைக் கரித்துக் கொட்டுகிறுர்கள்'' என்று அழுதுபுலம்பிவிட்டுத், தான் தன்னுடைய ஊரிலேயுள்ள அருணேதயக்கல்லூரியிலே, 70ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி, (அதாவது தமிழ் மாணவர் பேரவையினரின் ஊர்வலதினம்) கல்லூரிக்குள்ளே நின்று பிரச்சாரம் செய்த தமிழ் மாணவர் பேரவை அங்கத்தவர் ஒருவருக்கெதிராகத் தனது கையாள் ஒருவரை ஏவிவிட்டுச் செய்த சண்டித்தனத்தை இன்று மறைத்துவிட்டாலும், இவரது ஈனச் செய்கைகள் எம்மிளைஞர் மனத்தினை விட்டு இன்னமும் மறைந்துவிடவில்லை.

வட மாகாணத்திலேயுள்ள மாணவர்களின் மனத்திலே, துரோகிகளின் பட்டியலிலே முதலாவதாக நிற்கும் இதே வி.பி, மட்டக்களப்பிற்குக் கூட்டுறவு வாரம் சம்பந்தமாகச் சொற்பொழிவுக்குச் சென்ற போது, 'மாணவர் துரோகியே திரும்பிப்போ'' ''காக்கை வன்னியனே திரும்பிப்போ'' என்று மட்டுநகர் எங்கணும் எதிர்ப்புச் சுலோகங்களைக் கண்டு நடுநடுங்கியபடியே வின்சென்ட் மகளிர் கல்லூரிக்குச்சென்ற போது, அக்கல்லூரி மதிலின் மேலும் சுலோகங்களைக் கண்டு, ''இந்தத் தமிழ் மாணவர்கள் என்னை எங்கு சென்ருலும் விடுகிறுர்கள் இல்லையே'' என்றும், எனது கபடநாடகங்களை அம்பலமாக்குகிறுர்களேயென்றும் புலம்பியமை, அவரின் நெஞ்சைவிட்டு இன்னும் நீங்கியிருக்காதென்றே' நினைக்கிறேன்.

இப்படி எத்தனையெத்தனையோ துரோகங்களைச் செய்த வி. பி, ''தேசாபிமானி'' என்ற தேசத்துரோகப் பத்திரிகையிலே மாணவர் பேரவையைப் பற்றித் தாக்கித் தாறுமாறுகவும், பொய், புனைசுருட்டுகளாகவும் எழுதிவிட்டு மீண்டும் தமிழ் மாணவரிடையே எப்படித்தான் தலைகாட்டமுடியும்?

கொக்கு, மீனுக்கு உரிமை அளிக்கமுடியுமா? அப்படிக் கொடுத்தாலும் அது மீண்டுமொருமுறை மீனுக்குத் தீங்கு விளைக்காமல் இருக்குமா? வீணே, சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் எமது உரிமையைக் கேட்டுப் பேச்சுவார்த்தை நடத்திடமுடியாது. எந்த ஒரு தனிச் சிங்கள மனிதன்கூட எமது உரிமை தரப்படுவதை இன்று விரும்பவில்லை. இது எனது அனுபவ உண்மை. மீண்டும், மீண்டும் சிங்கள அரசிடம் மன்ருடுவது விழலுக்கிறைத்த நீர்போலப் பிரயோசனமற்றது. பிரிவினைதான் எமக்கு ஒரேயொரு விமோசனம் என்று தமிழ் இளைஞர்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

தமிழ் இளைஞர்கள் யாபேரும் இன்று ஒன்றுபட்டுப் போராட முன்வந்துவிட்டார்கள். அவர்களது ஆதரவு என்றும் கூட்டணிக்கே. அவர்களது இந்த முடிவை எந்த ஒருவராலும் தகர்த்துவிட முடியாது. சோசலிசம் என்று கூறிச் சிங்கள இசம் வந்துவிட்டது. வர்க்கபேதம் பேசினுல், அது, சிங்கள, தமிழ் வர்க்க பேதமாக மாறிவிட்டது. இனிமேல் எந்த ஒரு இளைஞனும் வி.பி. போன்ற அரசியல் உலுத்தர்களை நம்பத் தயாரில்லை. வி. பி தனக்குள்ள, கொஞ்சநஞ்ச மானத்தையும் பாதுகாக்கவேண்டின் தனது வாயைப் பொத்தியபடி, அறிக்கை விடுவதை நிறுத்தட்டும், அன்றேல் எமது இளைஞர்கள் சக்திமுன் அவர் போன்ற துரோகிகள் அரசியலிலிருந்து தூக்கி வெறியப்படுவார்கள். இது உறுதி!

—சிறையாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிமோலு'க்கு ஒரு சின்னக் கடிதம்!

ஐயா அருளம்பலம் அவர்களே,

நான் தங்களை அறியாத ஒருவன். ஆனால் நான் இவ்விடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவனானாலும் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகியஇரு தொகுதிகளிலும் எனது விவாக சம்பந்தமாகவும் எனது மற்றும் நெருங்கிய உறவினர்களின் தொடர்பாகவுமுள்ள ஒருவன் என்ற முறையிலும் இலங்கையின் மூது பெருந்தமிழினத்தின் குடிமகன் என்ற முறையிலும் என் சிந்தனைகளை இன்னும் அடக்கிக்கொண்டிருக்க முடியாத மன வேதனையால் என் கருத்துக்களை உங்களுக்கு மாத்திரமன்று மற்றும் உங்களைப்போல் மக்களின் குரலுக்குமதிப்புக்கொடாது தான் தோன்றித்தனமாக நிற்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நீங்கள் சிங்கள வெறி பிடித்த ஆட்சியாளரின் அடி பணிந்து அடிமையானது மல்லாமல், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களையும் அடிமைப்படுத்தி அரசுடன் இணைந்து அடிமைச் சாசனத்தில் ஒப்பமிட்டதுமல்லாமல் இலங்கை வாழ் தமிழ் இனத்தின் உள்ளங்களை கொழுந்துவிட்டெரியச் செய்யும் செய்கையாக மாணவ இளைஞர்களையும் சிறையில் வைக்க உடந்தையாக நீங்கள் இருப்பதையும் தமிழனும் தமிழ் கந்தக் கடவுளும் மன்னிக்கப்போவதில்லை என்பதை நீங்கள் இனியாவது உணரவேண்டும் என்னும் நோக்குடன் தான் இதை எழுதத்துணிந்தேன்.

## சிந்தித்து செயல்படுவீரா?

அரசின் அடிநக்கி ஆலவட்டம் பிடிக்கும் அடிமை அருளம்பலமே! இனியாவது சிந்தித்துச் செயல்படுவீரா? ஆங்கிலேயன் ஆட்சிக்காலம் 1924ம் ஆண்டு தொடக்கம் ஆட்சிக்கு நடந்த தேர்தல்களில் பொறுமையுடன் ஈடுபட்டு வந்த என் மனதுக்கு பொறுமையற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

12-3-72 சுதந்திரன் பத்திரிகையில் 9ம் பக்கத்தில் 'குடியரசு' அரசியல் சட்டத்தை ஆதரிக்காதே என்னும் தலையங்கத்துடன்வெளியான செய்தியில்குறிப்பிடப்பட்டிருந்ததைப்போல தாங்கள் தங்களைப் போட்டிகண்ட நல்லூர் தொகுதி வாக்காளருக்கு கூறியவைகள் உண்மையானால் தாங்கள் ஒரு பா.உ. பதவிக்கோ, அல்லது நல்லூர்த் தொகுதி மக்களின் ஜனநாயக ரீதியான பிரதிநிதியாகவோ பணியாற்றக் கூடியவராகத் தோன்றவில்லை.

## 'சிமோல்' மனிதன்

ஏனெனில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு வென்றவர் அவருக்குச் சார்பாக வாக்களித்தவர்களுக்கும் சரி, எதிராக வாக்களித்தவர்களுக்கும் சரி, ஏன் அவருடன் போட்டியிட்டுதோற்றவருக்கும் சரி அவரே ஜனநாயக முறையில் பிரதிநிதியாகிறார். தங்கள் கூற்றின்படி பார்க்கும் போது தாங்கள் ஒரு சாராருக்கு மாத்திரமே பிரதிநிதி யெனக் கருதுகிறீர்கள். அது முற்றிலும் தவறு என்பதே, எனது கருத்தாகும். ஏன் தங்களைப் போன்ற ஒரு சிலரைத்தவிர மற்ற, எல்லாத்தமிழ் பேசும் மக்களின் கருத்தும் அதுவேயாகும். இதிலிருந்தே தாங்கள் ஒரு பெரும் மனிதரல்ல சிமோல் மனிதன் என்பதை வெளிப்படுத்துகிறீர்கள்.

ஐயா, ஒரு தொகுதியின் உறுப்பினர் மற்றத் தொகுதியின் மக்களையும் பேணிப் பாதுகாக்கலாம். உரிமையுண்டு. அதுபோலவே மக்களும் மற்றும் தொகுதி உறுப்பினரின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடலாம். ஆகவேதான் ஐயா, குடியரசு அரசியல் சட்டம் தமிழ் பேசும் மக்களை அழித்து, ஒழித்துக் குழி தோண்டிப் புதைக்கத் தீட்டிய சட்டம். இதைத் தாங்கள் அறியாது இருப்பது பெரும் விந்தையாக இருக்கிறது.

## நல்லூரான் மீது ஆணை

இச்சாசனத்திற்கு நீங்கள் ஒத்துழைத்து ஒப்பமிட்டது மன்னிக்க முடியாத குற்றமாகும். தாங்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவரோ நானறியேன். ஆனால் தாங்கள் 'சிமோல்' அருளம்பலம் என்று அழைக்கப்படுவதால் தாங்களும் குமாரசூரியர் கூறிய கலப்புச் சாதித்தமிழனைப் போல் கலப்புச் சமயவாதியாகவும் ஒருவேளை இருக்கலாம். ஆனால் தாங்கள் திரு. செ. குமாரசூரியருடன் நல்லூர் கந்தனையும் வழிபட்டு நாவலர் சிலைக்கு அஞ்சலி செலுத்தியமையால் தங்களை ஒரு சைவனாகப் பாவித்து நல்லூரான் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன்.

தங்கள் தொகுதியில் உள்ள சூர சங்காரனாகிய நல்லூர்க் கந்தனும் பத்திரகாளி அம்மையும் தங்களைப்போன்றோரின் திருக்கூத்துக்களை

எழுதுபவர்

**'முல்லைத்தீவான்'**

சும்மா பார்த்துக் கொண்டு நெடுக இருக்க மாட்டார்கள், தமிழ் அன்னையின் ஓலம் கேட்டு முருகக்கடவுள் வேல் கொண்டு நெஞ்சைத்துளைக்க அம்மை குடலெடுத்து மாலை போடுவாள்.

நான் சென்ற 1970 தேர்தல் காலத்தில் நல்லூர்த் தொகுதிக்கு எனது நெருங்கிய உறவினர்களைப் பார்க்க வந்த சமயம் அறிந்த சிலவற்றைத் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

அச்சமயத்தில் கொக்குவிலுக்கு ஒரு வீட்டுக்கு நான் போயிருந்த போது நடந்த சம்பாசனையை கீழே தருகிறேன்—

வீட்டுக்காரர்:— தம்பி இம்முறை அருளம்பலம் தான்.

த. அ. கட்சி ஆதரவாளர்:— என்ன வி. சியில் நடந்ததையெல்லாம் தெரியாதோ, இன்னும் அவரைப் பாராளுமன்றம் அனுப்பப் போறியளே.

வீட்டுக்காரர்:— அந்தாளுக்காக அல்ல பெண் சாதியெல்லே வந்து தனக்குத் தாலிப்பிச்சை தரும்படிகேக்குது பாவம்.

த. அ. கட்சி ஆதரவாளர்:— உந்த மாசாலங்களுக்கு எடுபடுறியளே?

வீட்டுக்காரர்:— பெண் என்றால் பேயும் இரங்கும் என்னுடைய பெண்சாதியை மனுசி மயக்கிப்போட்டுது. அவவும் ஓம் சொல்லிப் போட்டா. நானும் ஓம் என்று விட்டன். இம்முறை ஒருக்கால் பார்ப்பம் சிமோலும் போகட்டும் பாவம்.

த. அ. கட்சி ஆதரவாளர்:— ''சிமோல் வெண்டால் பாருங்கோ என்ன செய்வாரென்று...''

இவ்விதம் கூறிக்கொண்டு தமிழரசுக் கட்சி வாலிபர் வெளியே போய் விட்டார். நான் வீட்டுக்காரரைப் பார்த்துக் கேட்டேன் ''அப்போ இந்தமுறை தமிழரசுக் கட்சி தோற்குமோ?

வீட்டுக்காரர்:— அப்படித்தான் நடக்கும். நாகநாதன் நல்லநேர்மையாளர் பிடித்த பிடி விடாதவர். சிமோல் திறமில்லைத்தான். என்ன செய்யிறது. ஓம் என்று அவ சொல்லிப் போட்டா''

இந்தளவோடு எங்கள் பேச்சு நின்று விட்டது.

இன்னொருமுறை நான் கொழும்புக்குப் போக இவ்விடமிருந்து மாங்குளம் போய் புகையிரத 3ம் வகுப்புப் பெட்டிக்குள் ஏறிய போது நடந்த பேச்சுக்களை கீழே தருகிறேன்.

உங்களை ஆதரித்த கொங்கிரஸ்காரர்:— அந்தப்பாவி மனிதன் இப்போ எங்களுடைய சொல்லையும் கேளாமல் தன் இட்டப்படி நடக்கிறான். எங்கள் கட்சியின் தலைவர் ஜீ ஜீயைக் கூட அவமதிக்கிறான். வெந்த வீட்டில் பிடுங்கினது அறுதி என்று தானே நடக்கிறான். தம்பி என்ன செய்வதுஎன்று தெரியவில்லை. கள்ளுச் சாராயத்தவறணைகளை மூடுவதற்கு மக்களின் கருத்தை அறிந்து அவைகளை மூடுவதற்குக் கணக்கெடுப்பது போல் ஒரு தேர்தல் மாத்திரம் அரசாங்கம், நடாத்தினால் இந்தப் பாழ்பட்ட படுபாதகப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கதிரையாலிறக்க பிட்டிசம் போடவும் மக்கள் கருத்தையறிய ஒரு வாக்கெடுப்பு நடாத்தச் சட்டமியற்றினால் இவற்றை கொட்டத்தை அடக்கலாம்'' என்றார்.

இன்னொரு வாலிபர் சன நெருக்கடியில் நின்று கொண்டு சொன்னார். ''அண்ணே தேர்தலின் போது நாங்கள் இவரின் போக்குத்தனங்களைச் சொல்லிச் சொல்லி சிமோலுக்கு போடாதேயுங்கோ, துரையப்பாவைப்போல்பல திருகுதாளம் போட்டுத் தான் வாழத்தான் பார்ப்பார் என்று. அப்போ கேட்டீர்களா?''

மற்றொருவர்:— மனிதனைத் தின்று பார்ப்பதா? நாங்களும் அந்த அருமையான நாகநாதனைத்தோற்க வைக்க வேண்டுமென்று இந்த அறுவானுக்குத் துண்டு போட்டம். இப்போதான் எங்கள் பேய்த்தனத்தை நினைத்துக் கவலைப் படுகிறோம்.

நானும் நின்ற நிலையில்என் வயது முதிர்ச்சியால் பெட்டிக்குள் ஏறிய இளைப்பினால் மூச்சிழுத்தபடி, ''நானும் உங்களைப் போல் கொக்குவிலுக்குவந்த போது அருளம்பலத்தை ஆதரிக்க வேண்டாம் என்று கூறியதுண்டு, ஆனால் அப்போ பலரும் பாவம் என்றுசொல்லிப் பரியாத நோக்குடன் தான் சிமோலை ஆதரித்தார்கள்'' என்றேன்.

ஐயா, சிமோலே சிந்தியும் உங்கள் நாடகத்தையும் தமிழரின் நிலைமையையும். இனியாவது உங்களது மன்னிக்க முடியாத செயல்களைக் கை

(9-ம் பக்கம் பார்க்க)

# திருகோணமலையில் சீன ஆயுதக் குவிப்பு!

## இதுதானா உங்கள் நடுநிலைக் கொள்கையின் மதிப்பு?

## அரசபேரவையில் தர்மர் கொதிப்பு!

''அண்மையில், தமிழ், ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் காணப்பட்ட பரபரப்பான ஒரு செய்தியைப்பற்றிப் பிரதமரின் கவனத்துக்குக்கொண்டுவர விரும்புகிறேன். 'டைம்ஸ் ஆப் சிலோன்' 28-7-72 இதழும், ஈழநாடு 30-7-72இதழும் என்னிடம் இருக்கின்றன. இந்தச் செய்திகள் இந்நாட்டு மக்களின் உள்ளங்களில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன:

''இந்தச் செய்திகளின்படி கடந்த சில நாட்களுக்கிடையில் பெருந்தொகையான ஆயுதங்களும், வெடிமருந்துகளும், தோட்டாக்களும் இரு பீரங்கிப் படகுகளும், திருகோணமலைத்துறைமுகத்தில் வைத்து, ஒரு சீனக் கப்பலிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டு இருக்கின்றன. இந்தச் செய்திகள் மறுக்கப்படாததினால், பெருந்தொகையான ஆயுதங்களும், வெடிமருந்துகளும், இரு பீரங்கிப் படகுகளும் சீனாவில் இருந்து இங்கு வந்துள்ளது உண்மையென்று நான் கருதுவது நியாயமானதே.

''இவைகளின் இறக்குமதி பற்றி இந்நாட்டு மக்களும் வெளியுலகும் தப்பபிப்பிராயம் கொள்ளக் கூடுமாதலால் இது பற்றிய சகல விபரங்களையும் உண்மைகளையும் இச்சபையில் பிரதமர் எடுத்துரைக்க வேண்டும். இது பிரதமரின் கடமையாகும்.

''பிரதமர் விளக்கம் கொடுப்பதற்கு வசதியாகப் பின்வரும் கேள்விகளை இங்கு எழுப்புகிறேன்.

(1) ''இந்த ஆயுதங்களுக்கும் வெடி மருந்துகளுக்கும் 2 பீரங்கிப் படகுகளுக்கும் எந்த முறையில் பணம் கொடுக்கப் போகிறீர்கள்? சீனா வழங்குவதாகக் கூறியிருக்கும் உதவியின் ஒரு பகுதியில் இருந்தா?

(2) ''நீதி அமைச்சரும் இதர அமைச்சர்களும் இச்சபையில் பேசுகையில் எம்மிடம் போதியளவு ஆயுதங்களும் வெடி மருந்துகளும் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குண்டு என்ற விகிதத்தில் இவை இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் மேலும் இவைகளை ஏன் இறக்குமதி செய்ய வேண்டும்? ஏன் இவ்வளவு பெருந்தொகையான வெடிமருந்தை தேக்கி வைக்க வேண்டும்? சாதாரணமாகப் பெரிய கடற்போர்களில் உபயோகிக்கப்படும் பீரங்கிப் படகுகள் நமக்கு எதற்கு? வெளிநாடுகளுடன் நாம் ஆயுதக்கை கலப்பை எதிர் நோக்குகின்றோமா? யாருக்கு எதிராக நீங்கள் கடற்போரில் இறங்கப் போகிறீர்கள்? எங்கள் வெளி நாட்டு எதிரி யார் என்பதை — உங்களுக்கு தெரிந்தால், நீங்கள் நாட்டு மக்களுக்குச் சொல்லித்தானாகவேண்டும்!

(3) ''இந்து சமுத்திரப் பிரதேசத்தை அமைதிப்பிரதேசமாக வைத்திருக்கும் பிரதமரின் திட்டத்துக்கு, அரசாங்கத்தின் இப்படியான இராணுவக்கலப்பான நடவடிக்கைகள் முரணாக இருக்கிறதென்பதை பிரத[illegible] இந்து சமுத்திர பிரதேசத்தை சமாதானப் பிராந்தியமாக வைத்திருக்கும் பிரதமரின் கொள்கைக்கு, நாட்டு மக்கள் முழுப்பேரும் ஆதரவாக இருக்கிறார்கள். ஆனால், இந்து சமுத்திரப் பிரதேசத்தில் கண் வைத்துள்ள ஒரு நாட்டின் உதவியுடன் பிரதமர் தாமே ஆயுதம் தாங்குவாரானால், அவரது கூற்றை எவரும் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க மாட்டார்கள்.

(4) ''பிரதமர் ஒரே சமயத்தில், கூட்டுச் சேராக் கொள்கை பற்றியும், வல்லரசுகளிடையேயுள்ள ''அதிகார ஏற்றத்தாழ்வு'' பற்றியும், அவற்றை சம நிலைப் படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் பேசுகிறார். இது பற்றி ஜூன் 11, 1972ம் ஆண்டு "ROUND TABLE" என்ற இதழில் பிரதமர் பின்வருமாறு கூறியிருக்கிறார்:- REDRESSING AN IMBALANCE IN POWER IN ITS IMMEDIATE ENVIRONMENT BY REGIONAL AND EXTRA REGIONAL COUNTER WEIGHTS AND BALANCES"

''நாங்கள் சர்வதேசிய விவகாரங்களில் தலையிட்டு வல்லரசு ஆதிக்கத்தை, சம நிலைப்படுத்தும் முயற்சியிலிறங்கிக்கொண்டு எப்படி நடு நிலைமை நாடாக விளங்க முடியும்?''

—இவ்வாறு 1-8-72ல் தேசியப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பிரதமரை நோக்கிக்கேட்டார்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையகத் தொழிலாளர்கள் போராடுவது எதற்காக?

## இ.தொ.கா. தலைவர் தொண்டமான் விளக்கம்!

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் புதிய மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்துவதற்காகவே இம்மாதம் 21-ம் திகதி முதல் காலை ஒன்பது மணிக்கே வேலை ஆரம்பிக்கும் முறையைக் கைக்கொள்வதென்றும், சம்பளக் கோரிக்கையின் அடிப்படையிலேயே வேலை செய்வதென்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவுசெய்துள்ளதென்று அதன் தலைவரான திரு. தொண்டமான் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆறு அம்சக் கோரிகையை மையமாக வைத்தே இந்த வேலைப் போராட்டத்தை ஆரம்பிக்க மேற்படி தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

— தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளத்திட்டம் வேண்டும்.

— சம தொழில் செய்யும் ஆண் பெண் இருபாலாருக்கும் சம சம்பளம் வேண்டும்.

— ஒரு வருட சேவைக்கு ஒரு மாதச் சம்பளப்படி சேவை காலப் பணம் வேண்டும்.

— கணக்குவேலை முடிந்து வெளியேறும் உரிமை இன்று ஆண்களுக்கு இருப்பது போல எல்லாருக்கும் வழங்க வேண்டும்.

— இரவுநேர வேலையாட்களுக்கு ஆறுமணி நேர வேலைக் கணக்கு வேண்டும்.

— பிந்தி வந்ததாகவும், வேலைக் குற்றம் என்று சொல்லியும் விரட்டும் பழக்கம் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

மலையகப் பாட்டாளி மக்களின் வாழ்வை வளம்படுத்திக்கொள்ள எடுக்கப்படும் இந்நடவடிக்கையில் எல்லாத் தோட்டத் தொழிலாளரும் சங்க வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நின்று வெற்றிபெறத் திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என்றும் திரு. எஸ். தொண்டமான் தமது ' அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது—

இந்நாட்டில் தேசிய வருமானத்தில் பெரும்பங்கை ஈட்டிக் கொடுக்கும் தேயிலை, ரப்பர் தோட்டப் பாட்டாளிகளின் வாழ்க்கை நிலை இன்று ஒரு பரிதபிக்கத்தக்க எல்லைக்கு வந்துவிட்டது. மழையிலும் வெயிலிலும் குளிரிலும் பனியிலும் மலைகளில் ஏறிப் பள்ளங்களில் இறங்கி காலைமுதல் மாலை வரை கைத்திறங்காட்டி, உடலின் சக்தியால் உழைத்து ஊர்செழிக்கச் செய்யும் தோட்டத்துப் பாட்டாளிகள் ஒழுங்காக உணவருந்த வழியில்லை. இந்நாட்டிலே குழந்தைகள் இறந்து பிறப்பதும், பிறந்து இறப்பதும் தோட்டப் பகுதிகளில்தான் அதிகம் என்று அரசாங்கக் கணக்கே கூறுகிறது. அதற்குக் காரணம் தோட்டங்களில் உள்ள தாய்மார்களின் உடலிலே சக்தியில்லை, உள்ளத்திலே தெம்பில்லை,

அவர்களின் நாளாந்திரச் சம்பளமோ மிகவும்,குறைவு. வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த லட்சணத்தில் தோட்டங்களில் வாரத்தில் மூன்று நான்கு நாட்களுக்குக்கூட வேலை கொடுக்கிறார்களில்லை. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாம் என்பது போல, சிறிது நேரம் பிந்தி வேலைக்குப் போனாலும்கூட மலையிலிருந்து விரட்டப்படு



கிறார்கள். வேலை செய்துகொண்டிருக்கும் போதே குற்றங்கண்டு வேறு விரட்டுகிறார். இதனுலெல்லாம் அவர்களின் சொற்ப வருவாயிலும் ஒரு பகுதியை இழக்க வேண்டியேற்படுகின்றது. காலத்தோடு வேலைக்கு வர வேண்டுமென்றால் காலைக்கடன்களை காலத்தோடு முடிக்க ஒழுங்கான முறையில் மலசலக்கூடம், தண்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தோடு பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டது. முதலில் மறுத்தார்கள் பிறகு அழைத்தார்கள், பேசிப் பேசி காலங்கடத்தினார்கள், தோட்டத் தொழிலாளியின் உழைப்புக்கேற்ப ஊதியம் கொடுக்கப்படவில்லைதான் என்பதையும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், கடைசியில் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று, பிரச்சினையையே ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள்.

வருமானத்திற்காக அல்லும் பகலும் உழைத்து அடிமைகளாய் உழன்று, அல்லலுற்று அவர்கள் ஏன் இன்னமும் அலையவேண்டும்? அவர்களும் மனிதர்கள்தான் என்பதை எல்லோரும் நன்குணரச் செய்யவேண்டுமென்பதே எமது அவா.

பழைய காலனி ஆதிக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த வேலை நேரங்கள் இன்றைய சூழ்நிலைக்குச் சிறிதும் பொருத்தமில்லை. தங்கள் வருங்காலச் சந்ததிகளை தங்களைவிட ஒருபடி முன்னேற்றமாக வளர்த்துவிடவேண்டுமென்றால், அக்குழந்தைகளைக் கவனிக்க பராமரிக்க மேல் பார்க்க காலையிலும்

## மலையகத்திலே.........

ணீர்வசதி இவைகளெல்லாம் செய்திருக்க வேண்டுமே அதுவுமில்லை.

ஒரு முற்போக்கான சமுதாய நியதியின்படி தொழிலாளிக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். மனித வாழ்க்கைக்குரிய வசதிகள் செய்து தரப்படவேண்டும். இவைகள் ஒன்றிலும் கவனம் செலுத்தாமல், தோட்டத் தொழிலாளரை மனிதர்களாகக்கூட மதிக்சாமல் தோட்ட நிர்வாகங்கள் தான்தோன்றித்தனமாக நடக்க முற்படுவது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது.

இந்த அவல நிலைகளுக்கெல்லாம் பரிகாரம்காண மாலையிலும் அவர்களுக்கு நேரம் வேண்டும். இந்த நாடு ஒரு சுதந்திரக் குடியரசாக மலர்ந்துள்ள இவ்வேளையில் தோட்டத் தொழிலாள மக்கள் மட்டும் பட்டிதொட்டிகளிலும் வரிசைக் குடில்களிலும் வாழ்ந்து மடியாமல் கிராமியச் சூழ்நிலையில் அவர்களின் வாழ்க்கை அமைக்கப்பட வேண்டும். மாடு கன்று, கோழி, குஞ்சு, தோட்டம் துரவு என்ற குடும்பச் சூழலில், உற்றார் உறவினரும் மற்ருரும்கூடி மகிழ்ந்து பல கேளிக்கை விளையாட்டுகளில் கலந்துகொண்டு பல சமுதாயப் பணிகளிலே பங்குபற்றிச் சுதந்திர மனிதர்களாக வாழ அவர்களுக்கு வாய்ப்பிருக்கவேண்டும்.''

---

### என்றுமடியு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பும் மா. ம. சே கடித விலாச முத்திரைகள் எல்லாம் தனிச்சிங்களத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளன.

இதே அதிபர்தான் சென்ற வருடம் இராப்போசன விருந்திற்கு துரோ(க)கப்பா எனப்படும் துரையப்பாவை அழைக்க முடிவு செய்து மாணவர்களின் கடும் எதிர்ப்பினுல் முயற்சியைக் கைவிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### ஈழத் தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருடன் இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றிப் பேசியிருக்கிருர். தமிழக அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மௌனமாக இருக்கிறது என்று சொல்வது தவருகும். செய்வதை, செய்யவேண்டியதை [illegible] செய்யவேண்[illegible] மறந்து செய்வோம். பேசிப்

### தமிழை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் இடம் பிடித்து விட்ட அதே நேரத்தில் — தமிழ் மொழி தேசிய அந்தஸ்துப் பெற முடியாது தள்ளப்பீட்டு விட்டது என்பதையே நாம் சிந்துக்கவேண்டும். இதற்குப் பின் தமிழ் மொழிக்கு சில அந்தஸ்துக்கள் கிடைத்தாலும்— ஒரு வேளை சிங்களம் மட்டும் சட்டத்திற்கு நேர்ந்த கதியும் இதற்கு ஏற்படலாம். எனவேதான் தமிழ்மொழிக்கு அடிப்படை அரசியல் அந்தஸ்துக்கேட்கின்றோம். அதற்காகக்கூட்டு முன்னணி அகிம்சை வழியில் போராடவும் தயங்கமாட்டாது.

(அடுத்த இதழில் முடியும்)

---

பிரச்சினையை குழப்ப நாங்கள் விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தானுடா விட்டாலும்தன் தசை ஆடும் [illegible] இப்போது நான் சொல்லவிரும்பவில்லை.

### சின...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''சோல்பரித் திட்டத்தை மக்கள் தூக்கி எறிந்ததைப் போன்று புதிய அரசியல் அமைப்பை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. சிறுபான்மையினரைச் சிங்களவர்கள் நசுக்குவார்கள் என்று பிரித்தானியர் அறிந்திருந்தால், சுதந்திரம் கொடுத்திருக்கமாட்டார்கள்.

''சிறுபான்மையினரை நசுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பாதுகாப்பான 29-வது ஷரத்தை அகற்ற புதிய அரசியல் அமைப்பு கொண்டுவரப்பட்டது. நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இப்போது எந்த ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. அவ்வாறு கூறுவது சுத்தப் பொய்யாகும்.

தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- நெடுந்தீவு தொடக்கம் திருக்கோயில் வரையுள்ள உள்ளூராட்சி மன்றங்களைத் தமிழர் கூட்டணி கைப்பற்ற வேண்டும் — எமது நாளாந்த நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழில் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் உரிமை பெறத் தகுதியுள்ளவர்களாவோம். தமிழருக்கிடையே ஐந்தாம் படையை உருவாக்குவதன் மூலம் எம்மை அடக்கிவிட முடியாது'' என்ருர்.

நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது:—

''தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கண்டு அரசாங்கம் பயப்படுகிறது. மே 22இல் தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பை அரசாங்கம் உணர்ந்து கொண்டது. தனது ஆதரவாளர்களின் நிலைமையையும் அரசாங்கம் உணர்ந்து கொண்டது.

''எங்களில் சிலரையும் வாலிபர்களையும் சிறையில் அடைத்துவிட்டால் மாத்திரம் உரிமைக்குரல் நின்றுவிடாது. எமக்குச் சிறை பழக்கப்பட்டது. சீனுக்காரரின் ஆயுதத்தைக் கொண்டு எம்மை அடக்கலாமென்று அரசு நினைக்கக்கூடாது.

'எமது பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாகி விட்டது- மதுரையில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டில், எமது பிரச்சினை பற்றிக் கேட்குமாறு இந்திரா காந்தியைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் வரும்— தர்மம் வெல்லும்.

'செப்டம்பர் 30க்குள் எம் கோரிக்கைகள் ஏற்படாவிடில் போராட்டம் ஆரம்பமாகும். அது ஒரு மாதத்தில் முடியும் போராட்டமல்ல அது நிரந்தரமான போராட்டமாகும். எங்கள் ஆயுதம் தர்மம். மக்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக வேண்டும். நாம சமாதானம் பேசவே முற்படுகின்ருேம். அது மறுக்கப்பட்டால் அடுத்தசந்ததி அதற்கு இடம் வைக்காது.'

### இசைவிழாவும் தியாகராச உற்சவமும்!

கொழும்பு, தியாகராஜகான சமாசத்தின் ஆதரவில் வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் விநாயக ஆலய மண்டபத்தில் இம் மாதம் 25, 26 திகதிகளில் தமிழிசை விழாவும் 27ம் திகதி தியாகராஜ உற்சவமும் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் தவில் வித்துவான் நாச்சிமார் கோவில் கே. கணேசன், திருமதி முத்துலட்சுமி சங்கரய்யர், ஈ. சுப்பையா பிள்ளை (கிளாரினட்) ஆகியோருக்கு பொன்னுடை போர்த்தி கௌரவப்பட்டம் வழங்கப்படவிருப்பதாக திரு. கே. கே. அர்ச்சுதன் தெரிவித்தார்.

27ந் திகதி காலை 8.30 மணிமுதல் 12 மணி வரை பஞ்சரத்தினக் கிருதிகளும், மற்றுள்ள சகல கலைஞர்களும் சேர்ந்து தியாகராஜ சுவாமிகளுடைய பாடல்களைப்பாடுவார்கள்.

### நெடுங்கேணியில் தேசியக்கொடி தீக்கிரை!

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் சமீபத்தில் சிரமதான மூலம் விளையாட்டுமைதானம் துப்பரவு செய்யப்பட்டது. இதில் அதிகமான பெற்ருேர்கள், பழைய மாணவர்கள் பங்குகொண்டார்கள். தேசியக் கொடி ஏற்றிய பின்னரே சிரமதானம் ஆரம்பிக்கப்பட்டது.

சிரமதானம் வெற்றிகரமாக முடிவடைந்துகொண்டிருந்தபோது மதிய சாப்பாட்டு நேரம் வந்து விட்டதால் எல்லோரும் வேலையை நிறுத்திச் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது அங்கிருந்தவர்கள் மத்தியில் சிறு பரபரப்பு ஏற்பட்டது. தேசியக்கொடி எரிந்துகொண்டிருக்கக்காணப்பட்டதே இதற்குக் காரணம்.

### தன்னுட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாந்தரப் பிரஜைகளாகவே வாழ்கின்றனர். இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ விரும்பாததாலேயே அநேகர் வெளிநாடுகளில் சென்று வாழ்கின்றனர். மலேஷியாவில் மட்டும் சுமார் ஒரு லட்சம் பேர் வாழ்கின்றனர்.

எமது பிரதேசத்துக்கு சுயாட்சி பெறுவோமேயானுல் நாம் இரண்டாந்தரப் பிரஜையாக வாழ நேரிடாது. வெளிநாட்டிலும் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்ந்து கொண்டிருப்போர் எமக்கு சுயாட்சி கிடைக்குமேயானுல் இங்கு திரும்பி வந்து விடுவர்.

எமக்கென தனிப் பிரதேசம் உண்டு. இப்போது நமக்குத்தேவைப்படுவது சுயாட்சியேயாகும். அந்த இலக்கை அடைய விரைந்து செல்வோம்.


மில்க்வைற் சோப் விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

மில்க்வைற் சோப் பாவனையாளர்கள் எமது பரிசுத்திட்டத்தில் அதிக ஆர்வத்துடன் பங்கு பற்ற வேண்டியிருப்பதால், தயவுசெய்து உங்கள் வாடிக்கையாளர்களுக்கு மில்க்வைற் சோப் விற்பனை செய்யும்பொழுது அவற்றின் மேலுறைகளுடன் விற்பனை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

அதிபர்,

மில்க் வைற்சோப் தொழிற்சாலை

த. பெ இல. 77,— யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை தாழ்த்துகிறது புதிய அரசியல் சட்டம்!

## தன்மானம் காத்து, தமிழரசு நிறுவிட தந்தையின் தலைமையில் களம்காண்போம்!

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடியாம் எம் பழம்பெரும் குடிவழிவந்த தமிழன்—நெற்றியிலே இரத்தத்தால் திலகமிட்டு, "சென்றுவா கண்ணா — வென்று வா நீ" என்று போர்க்களத்திற்கு வாழ்த்தி வழி அனுப்பி வைத்த தமிழ் தாயின் வழிவந்த தமிழன்—பால் மணம் மாறாத் தன் பாலகன் போர்க்களத்தில் எதிரிக்குப் புறமுதுகிட்டு மாண்டுவிட்டான் என்று மாசுபடக் கேள்வியுற்று—தாயகமே—தமிழகமே இது உண்மையானால் அவனுக்கு பாலூட்டிய என் மார்பையே அறுத்தெறிவேன் என்று வீர சபதமிட்ட தமிழன்னையின் வழிவந்த தமிழன்—எதிரியின் விலா எலும்பொடிக்கப் பிள்ளைப் பேறு பெறமுடியாத பாவியாகி விட்டேனே, என்ற வெஞ்சினத்தால் தன் வயிற்றையே கிழித்தெறிந்த தமிழச்சியின் வழிவந்த தமிழன்—

உடைவாளுடன் வடநாடு படை நடத்தி தமிழின் தனித்தன்மையை இகழ்ந்த கனகன், விஜயன் என்ற வடநாட்டு மன்னர்களைச் சிறைப்பிடித்து அவர்களின் தலையிலேயே கல்லேற்றி வந்து—சேர நாட்டிலே பிறந்து — பாண்டிய நாட்டிலே கணவனை இழந்து — சோழ நாட்டிலே தெய்வமாகிய கண்ணகிக்குப் பத்தினிப் புகழ்பாடிச் சிலைவடித்த வீரத் தமிழன் வழிவந்த தமிழன்—வானளாவும் இமயத்தின் உச்சியிலே தமிழ்கொடி பொறித்த தமிழினம் கண்ட தமிழன்—வலிமை கொண்ட தன் கப்பல்படையால் வங்கக் கடலைக் கலக்கி பர்மாவிலே — அனுராசபுரத்திலே வெற்றிப் பவனி வந்த தமிழன் வழிவந்த தமிழன்—

தன் மகன் பசுங்கன்றைக் கொன்றுவிட்டான் என்பதற்காக பட்டத்து இளவரசன்—பாலூட்டிய மகன் என்றும் பாராது தேர்க்காலிலிட்டுக் கொலைக்கு கொலை என்று தீர்ப்பளித்து உலகிற்கு நீதியின் மேம்பாட்டை எடுத்துக்காட்டிய மனுநீதிச் சோழன் வழி வந்த தமிழன் — புலியின் பிடியிலே சிக்குண்ட புள்ளி மானைக் காக்க — தன் சதையிலே ஒரு துண்டை பசியால் துடித்த புலிக்கு இரையாக்கி புள்ளிமானைக் காத்த ஈகைக் குணம் கொண்ட தமிழ் மாமன்னன் முசுகிந்தன் வழி வந்த தமிழன்—

தமிழனின் தனிச்சிறப்புக்குச் சவால் விட்டுக் காலத்திற்குக் காலம் படை எடுத்த ஆப்கானிஸ்தர், அரேபியர், திருதர், குசாணர், ஊணர், தாமர்லேன் போன்றோரின் பெரும்படை எடுப்புக்களை எல்லாம் புறமுதுகிட்டு ஓடச் செய்த தமிழன் வழிவந்த தமிழன்—

பஃறுளி ஆற்றின் தென் மதுரையிலே '38' ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பு தமிழ்ச் சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழன் வழிவந்த தமிழன்—

ஈழத்திலே இன்று மொழியிழந்து, ஆட்சியிழந்து அடிமைப்பட்ட நிலையில்சுருண்டு கிடக்கும் பரிதாப நிலை—ஐயகோ ... கொடுமை... கொடுமை — பாராண்ட இனத்தின் பழம்பெரும் புகழ் மாண்டு மடிந்துவிட்ட வேதனைக்குரிய சோகச் சூழல்!

### தமிழினம் கேட்டறியாத சொல் அடிமை

முரசின் முழக்கமும்—போர்ச் சங்கின் பேரொலியும்—யாழின் சப்தமும்—தமிழின் நல்லிசையும் மக்களின் செவிகளிலே இன்பம் பாய்ச்சிட்ட காலம் மாண்டு மறையவில்லை. மார்பிலே மணிமாலைதுவள - சிரத்திலே வைரமுடிபளபளக்க — நொடிக்கு நொடி மின்னிடும் போர்வாள் உறையிலே கிடக்க—தமிழ்கொடி தரணி ஆள—வீரத்தின் விளைநிலம் தமிழகம் என்ற சிரிப்பொலி எத்திக்கும் பகைவர்களை நடுங்கிடச்செய்ய - வீரமுகம் காட்டி வேகப்புன்னகை வீசிச் சிறப்புற்ற மலைநாட்டு மாமன்னன் சேரனும், நஞ்சை நிலச் சோழனும், கடல் கடந்த நாடுகளை அடக்கி ஆண்ட, தமிழ்ச் சங்கம் வைத்த பாண்டியப் பேரரசும் வளர்த்த மொழியல்லவா—எம் அழகு தமிழ்! அதற்கு அழிவென்றால் அங்கே எம் உயிரே துரும்பாக வேண்டுமென்றல்லவா பொருள்.

வேலுக்கும் விழி வணங்காத வீர வழி வந்த தமிழினம் எப்போது கூனிக்குறுகிய கூட்டத்தைச் சேர்ந்தது? தமிழர் வீரத்திலே இல்லாத ஒரு புதிய வரலாற்றை (அடிமை) என்றைக்குமே ஈழத்தமிழினம் படைக்கத் துணியாது என்பதை விழிப்புற்ற தமிழினம் எடுத்துக்காட்ட அகிம்சைவழியில் தயங்காது. காதிலே குண்டலமினிர—கையிலே வளையலசைய—காலிலே சிலம் பொலிக்க—கழுத்திலே முத்துமணிவிளங்க வெற்றிப்பவனி வந்த எம் தமிழன்னையின் அடிமைத்தளை ஒடிக்க—இழிநிலைபோக்க என்றைக்குமே எம் கூட்டு முன்னணியின் வழிதான் சிறந்த வழி எனத் தமிழினம் கண்டு விட்டது. அகிம்சையிலே நம்பிக்கை கொண்டு விட்டது.

### இலங்கையின் பூர்வீகக்குடி திராவிட இனம்

ஈழத் தமிழினத்தை அழித்தொழிக்கக் காலத்துக்குக் காலம் தொடர்ந்து செயல்பட்டு வரும் ஆட்சியாளர் சென்ற திங்களில் நிறைவேற்றிக்கொண்ட குடியரசு போர்வையின் மூலம் நிரந்தரமானதொரு அடிமை முத்திரையை 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் மீது குத்திவிட்டிருக்கின்றார்கள்.

தமிழ் பேசும் மக்கள் எங்கோ இருந்து இங்கு வந்து அகதிகளாகக் குடியேறியவர்களல்ல! இலங்கை என்ற ஒரு நாடு கண்டு பிடிக்கப்பட்டு — இங்கு அன்றே நிலையாகத் தன் வாழ்வை நிலைநிறுத்திக்கொண்ட ஒரே இனம் — தமிழினம் — திராவிட இனம்தான் என்பதை யாருமே மறுக்கமுடியாது.

பாலி மொழியின் பிரிவிலிருந்து சிங்கள இனம் உருவாவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திராவிட மன்னன் இராவணனுடைய ஆட்சி இங்கு பரந்து விரிந்திருந்தது என்பதை, ராமாயணத்திலிருந்து நாம் படிக்கின்றோம். ஆனால் எப்படியோ கால வெள்ளத்தின் வேகப் பாய்ச்சலால் பெரும்பான்மை என்ற மொத்தப் புள்ளி விபரத்தைப் பெற்றுவிட்ட ஆட்சியாளர்கள், அதிகாரம் தம் வசம் என்ற இறுமாப்பில் தமிழையும்—தமிழ் பேசும் மக்களையும் ஒழிப்பதில்தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

## கே. எஸ். ஏ. கபூர்

## இனங்கள் பிரிந்து செல்லும் உரிமைகூட சோவியத் அரசமைப்பிலுண்டு!

ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பு அமெரிக்காவை ஆட்கொள்ளுவதற்கு முன்பு, சிகப்பு இந்தியர்கள்தான் அமெரிக்காவின் பெரும்பான்மைப் பூர்வீகக் குடிகள் என்ற பெருமையைப் பெற்றிருந்தனர். ஆனால் இன்று அந்நிலை மாறி சிகப்பு இந்தியர்கள் சட்டத்தால் அழித்தொழிக்கப்பட்டு மிக மிகச் சிறுபான்மையாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குத்தான் இன்று இவர்கள் வாழ்கின்றார்கள். காலப்போக்கில் இச்சிறு கூட்டமும் தானாகவே அழிந்தொழிந்துவிடும். அதே நிலையில்தான் ஈழத்தமிழ் பேசும் மக்களின் அன்றும் இன்றும் உள்ள அரசியல் வாழ்வு.

### சமத்துவம் கண்ட லெனின் சித்தாந்தம்

ஒரு நாட்டில் அரசியல் அடிப்படைச் சட்டத்தை இயற்றும் போது கண்டிப்பாக முப்பெரும் விதிகளைக் கடைப்பிடிப்பதில் ஆட்சியாளர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று உலகப் பெரும் அரசியல் விற்பன்னர்களெல்லாம் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

1. சிறுபான்மை, பெரும்பான்மை என்ற தேசிய வேறுபாடுகளின்றி மக்கள் சுயமாக பயமின்றி தடையின்றித் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பரவலான உரிமை.

## சேலைத்தலைப்பில் தொங்கும் பொதுவுடமையாளரே! லெனின் சொன்னதை மறந்தீரோ நீர்!!

2. மக்களின் எண்ணங்களையும் தேவைகளையும் ஒரு அரசு தானாக உணர்ந்து — விருப்பு வெறுப்புக்களைக் களைந்து மனித தர்மத்தோடும், அனுதாபத்தோடும் செயல்படுவது.

3. ஒரு நாட்டின் அரசியல் அடிப்படைச் சட்டத்தை இயற்றுவதற்கு எந்த அரசியல் கட்சியையும் சாராதவர்களாக அந்நாட்டின் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களிலிருந்தும் நடுநிலையானவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பதே அம் மூன்றும்.

இதன் அடிப்படையில் நாம் சிந்தித்துப்பார்க்கின்ற போது இம்முப்பெரும் தத்துவங்களுக்கும் நேர் எதிர் [illegible] கள் [illegible] செயல்படுத்தியிருக்கின்றனர்.

சோவியத் ரஷ்யாவில் சார் மன்னன் ஆட்சி ஒழிக்கப்பட்டு, அங்கு தேவையான ஒரு அரசியல் அடிப்படைச் சட்டத்தை இயற்றும் போது சுமார் 2400 பொதுக்கூட்டங்கள் கருத்தரங்குகள், விவாதமேடைகள் ஆகிய பல நடத்தி, மக்களின் கருத்துக்களை ஆண்டுக்கணக்காக நேரடியாக அறிந்துதான் அரசியல் சட்டத்தை இயற்றினார்கள். அதனால்தான் அங்கு அரசியல் கெடுபிடிகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டு, சிறுபான்மை பெரும்பான்மை என்ற போட்டி பூசல்களும் ஒழிக்கப்பட்டன.

12 கோடி ரஷ்ய மொழி பேசுகின்ற மக்களுக்கு என்ன உரிமை இருக்கின்றதோ—அதே உரிமைகள்தான் 20 லட்சம் கார்க்கசியர்களுக்கும் — 16 லட்சம் ஆர்மீனியர்களுக்கும் —14 லட்சம் எஸ்தோனியர்களுக்கும் — 7 லட்சம் கார்லோபின்னிஸ்ட்களுக்கும் சமத்துவமாகத் தரப்பட்டுள்ளன. ஏன் — இச் சின்னஞ்சிறிய இனங்களெல்லாம் விரும்பினால் பிரிந்து சென்று தனிநாடு அமைத்துக்கொள்ளும் உரிமை கூட வழங்கப்பட்டுள்ளன. இச் சில தேசிய இனங்களுக்கும்-மொழிகளுக்கும் — மொழி வளமோ — இலக்கியமோ வரலாறோ கிடையாது. இருந்தும் கூட சோவியத் ஆட்சியால் மிக மிகச் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு இத்தனை சுயேச்சையான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரஞ்சுப் புரட்சிக்கு வித்தான்றிய "வால்டேர்" சொன்னான் — "ஒரு தேசிய இனம் தன் உரிமையைப் பற்றி சிந்திக்கத்தொடங்கி விடுமானால் — அதன் சக்தியை எந்த சக்தியாலும் அணைக்கட்டமுடியாது" என்று. வால்டேரின் இச் சித்தாந்தத்தில் லெனினுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அதனால்தான் லெனினும் தன் உண்மையான பொதுவுடைமைத் தோழர்களைப் பார்த்துச் சொன்னான்-பிற தேசிய இனங்களுக்கு உத்தரவாதமான உரிமைகள் தரப்பட்டு (அடிப்படை அரசியல் சட்டமூலம்) சமத்துவமாக மக்கள் நடத்தப்பட்டாலே தவிர வேறு எந்தப் பலத்தாலும் ஒரு நாட்டின் அழிவைத் தடுக்க முடியாது என்று திட்டவட்டமாகக் கூறினர்.

இதற்கு இங்குள்ள பொதுவுடைமைத் தோழர்கள் என்ன சொல்லப்போகின்றார்கள்? லெனின் சித்தாந்தம் பிழையா? சோவியத் அரசியல் சட்டம் பிழையா? அல்லது 12 கோடி ரஷ்ய மொழியாளர்களுக்கு மத்தியில் 7 லட்சம் கார்லோ பின்னிஸ்ட்கள் சமத்துவமாக வாழும் போது— 1 கோடி சிங்கள மக்கள் மத்தியில் 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் சமத்துவமான உரிமை கேட்பது தவறா?

### அவசர காலச் சட்டத்தின் கீழ் அரசியல் சட்டம்

உலகில் எந்த சர்வாதிகார நாடுகளாக இருந்தாலும் சரியே — சரித்திரத்திற்கு முற்பட்ட கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்கள் தொட்டு, நீதிக்கும், வீரத்திற்கும் பெயர் பெற்ற வழி வழித் தமிழகம் வரை—பிரஞ்சு மன்னர்கள் லூயி, நெப்போலியன் தொடக்கம் ஹிட்லர், முசோலினி வரை ஒரு நாட்டுக்குத் தேவையான அடிப்படை அரசியல் சட்டம் அவசியம் என்று நினைக்கும் போது, மககளின் கருத்துக்கள் துச்சமாக்கப்பட்டு — அதுவும் அவசரகால சட்டத்தின் கீழ் துப்பாக்கி முனையில் கொண்டு வர இந்நாடுகளும் —இவர்களும் நினைத்ததுண்டா? அல்லது வரலாற்றில் வேறு நாடுகள்தான் இருக்கின்றனவா? ஆனால் எமது இலங்கை மட்டும் இதில் நிரந்தரமான தொரு கறையைத்தேடிக் கொண்டது.

அதே போன்று — ஒரு நாட்டில் அடிப்படை அரசியல் சட்டத்தை இயற்றும் போது கட்சி சார்பற்றவர்களைக்கொண்டுதான் இதை இயற்றவேண்டுமென்பது அரசியல் மரபு. தனக்கென்று திட்டவட்டமான அரசியல் கொள்கையைக் கொண்டவர்கள் இப்புனிதமான பணிக்குள்ளாகும் போது தத்தமது கொள்கைக்கேற்ப அதை உருவாக்க நினைப்பது இயற்கை. அதனால்தான் கட்சி சார்பற்றவர்கள்தான் இப்புனிதமான பணிக்குப் பொருத்தமானவர்கள் என்று காந்தி, நேரு போன்றவர்களெல்லாம் எண்ணிச் செயல்பட்டிருக்கின்றார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக டாக்டர் கொல்வின் '38' அடிப்படைச்சட்டங்களை அமைத்தெடுத்தபோது அதில் ஒரு கமாவைத்தானும் திருத்த முடியாது— என்று அரசியல் நிர்ணய சபைக்குக் கூறியதை நாம் பார்த்தோம். தமிழினத்தின் தனிப்பெரும் வல்லரசாம் தமிழரசு கொண்டு வந்த ஆகக் குறைந்த சலுகைகளையும்—திருத்தங்களையும் கூட அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துச் சட்டமாக்கினார். குடியரசால் தமிழ் தாழ்த்தப்பட்டுள்ளது.

ஏதேச் சாதிகாரமாகக் கொண்டு வந்த இக்குடியரசுத் திட்டத்தால் பழைய மொழியாம் எம் தமிழுக்கு இருந்து வந்த ஆபத்து இப்போது நிரந்தர அடிமை என்ற சவக்குழிக்குள் தள்ளப்பட்டு விட்டது.

1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் மிகச் சிறுபான்மை வாக்குகளால் தான் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் அது இலங்கை அடிப்படைச் சட்டத்தோடு இணைக்கப்படாததால் — 2/3 பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்படாததால் சில சமயங்களில் அது நீதிமன்றங்களில் நிராகரிக்கப்பட்ட ஒரு சட்டமாகவே இருந்து வந்தது.

இந்நிலையில் நிச்சயமாக ஒன்றை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும். 2/3 பெரும்பான்மை வாக்குகளால் சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் அமைப்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(21)



## மாமல்லபுரத்தில் உயிர்பெற்ற சிற்பம்!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

''மங்கியதோர் நிலவினிலே, மாமல்லபுரக் கடற்கரை மணலிலே, சிந்தை குளிர்ந்திட அமர்ந்திருந்து, சிங்காரக் கவிதைகளைத் தீட்டவேண்டும்...''

சின்ன வயதிலே கவிதை எழுதும் ஆர்வம் எனக்கேற்பட்டு, கவிதையென்றபெயரில் எதை எல்லாமோ கிறுக்கிக்கொண்டிருந்த காலத்தில் இப்படியொரு ஆசை என்னுள்ளத்தில் ஏற்பட்டிருந்தது.

பொதுவாக இந்தக்காலத்து இளைஞர்களுக்கும்மாணவர்களுக்கும் கவிதை எழுதுவதிலே ஆர்வம் அதிகரித்திருப்பதைப்போல, எனக்கும் ஆரம்பத்திலே 'கவிதை' ஆசைதான் இருந்தது. பல கவிதைகளை எழுதி, அவை பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருக்கின்றன.

என்னுடைய கவிதைகளைப் பற்றி ஒருநாள் கவிஞர் காசி ஆனந்தனுடன் பேசிக்கொண்டிருந்தபோது நான் சொன்னேன்:- 'அறிஞர் அண்ணா ஒருமுறை கூறினார் தான் கவிதை எழுதித் தோற்றவன் என்று. அது போலவே நானும் அத்துறையிலே தோற்றுவிட்டேன்' என்று கூறினேன்.

அதற்குக் கவிஞர் என்ன கூறினார் தெரியுமா?— 'நீங்கள் கவிதைத்துறையில் தோற்கவில்லை — தொடராமல் விட்டுவிட்டீர்கள். அவ்வளவுதான்' என்றார் கவிஞர்.

கவிதைத்துறையில் தோற்றேனே அல்லது தொடராமல்விட்டேனே—அது வேறு விஷயம். ஆனால் ''மங்கியதோர் நிலவினிலே, மாமல்லபுரத்துக் கடற்கரை மணலிலே சிந்தை குளிர்ந்திட அமர்ந்திருந்து, சிங்காரக் கவிதைகளைத் தீட்டிடவேண்டும்' என்ற என்னுடைய ஆசையில் மட்டும் தோற்றுவிட்டேன்.

ஏன் தெரியுமா? மாமல்லபுரத்தை நாங்கள் சென்று அடைந்தபோது பிற்பகல் இரண்டு மணி. கடுமையான வெய்யில் தகித்துக்கொண்டிருந்தது. அந்நேரத்தில் மங்கியதோர் நிலவு எப்படி வர முடியும்?

சென்னையிலிருந்து 37மைல் தொலைவிலுள்ள மாமல்லபுரத்துக்கு பேருந்து வண்டி மூலம் சென்ற நாம், இடையிலுள்ள திருக்கழுக்குன்றத்தில் இறங்கி கழுகு உணவு உண்ணுகின்ற காட்சியை கண்டு ரசித்துவிட்டு, மாமல்லபுரத்துக்கு செல்வது என்று திட்டமிட்டிருந்தோமாயினும், திருக்கழுக்குன்றத்துக்கு நாம் வந்து சேரும்போது பகல் 12 மணி ஆகிவிட்டிருந்தது. காலை 11:30க்கு எல்லாம் கழுகு வந்துவிட்டுப் போய்விட்டதென்று அங்கே தெரிவித்தார்கள். எனவே திருக்கழுக்குன்றத்தில் இறங்காமலேயே மாமல்லபுரம் நோக்கி எமது பயணம் தொடர்ந்தது.

பேராசிரியர் கல்கி அவர்கள் தமது 'சிவகாமியின் சபதத்தில்'' தமக்கேயுரிய வர்ணனைகள் மூலம் எமது நெஞ்சங்களில் நீங்கா இடம் பெறச் செய்துவிட்ட தமிழ் நாட்டின் கலைக்கூடமாம் மாமல்லபுரத்தின் எழிற் காட்சிகள் எம் கண்முன்னே தோன்றுகின்றன. மாமல்லபுரத்தை நெருங்கும்போது வழிவழியே கல்லில் வடிக்கப்பட்டு சிதைந்த நிலையில் உள்ள சிறு சிறு மண்டபங்களும், யானை, குதிரை சிலைகளையும் காணுகிறோம்.

ஆம், 1300 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் தனது சிந்தனையில் உதித்த கலைப்பேரார்வத்தை — அதைக் கல்லில் செதுக்கிவைத்துள்ள நுட்பத்தை இன்று உலகம் முழுவதுமே சண்டு மூக்கின் மேல் விரல் வைக்கின்றதைக் பார்க்கின்றபோது நாமும் தமிழினத்தவர்கள் என்ற இறுமாப்பு நமக்கு ஏற்படுவது இயற்கைதானே!

கருங்கற் பாறைகளைக் கண்டபோது, அப்பாறைகளைக் குடைந்து உயிரோவியச் சிற்பங்களாக அவற்றை உருவாக்கிடவேண்டுமென்ற கலை ஆர்வம் உலகில் தமிழனைத் தவிர வேறுயாருக்கும் ஏற்பட்டதில்லை. அதன் பிரதிபலிப்பாகத்தான் மாமல்லபுரத்துக்கடற்கரை யோரத்திலேயுள்ள கலைக்கூடம் இன்னும் தமிழர்களின் பண்டைப்பெருமையை எடுத்துரைத்துக் கொண்டு இருக்கின்றது.

ஆஹா, கடலோரத்திலே எழுந்து நிற்கும் கடற்கரைக்கோவிலின் அழகுதான் என்னே! கடல் அலைகள் அக்கோவிலின் புறச்சுவர்கள் மீது வந்து வந்து மோதிச் செல்லும் அழகு தனி அழகுதான்! அலைகள் மோதியும், கடல் பொங்கியெழுந்தும், மல்லைக் கடலோரத்தில் திராவிட சிற்பத்திறனைப் பறையறைந்து கொண்டு 1300 ஆண்டுகளாக அப்படியே அழிவின்றி காட்சி தருகிறது கடற்கரைக்கோவில்!

ஜிலுஜிலு வென்று கடற்காற்று உடலைத் தழுவிச் செல்ல, மாமல்லபுரத்துக் கடற்கரையோரத்தில் காணப்படும் கோவில் அழகையும் கடல் அழகையும் அப்படியே பார்த்துக் கொண்டு மணிக்கணக்கில், ஏன் நாட்கணக்கில் கூட இருக்கலாம்...

கல்லில் வடிக்கப்பட்ட குகைக்கோவில்கள், இரதங்கள் ஆகியவற்றை சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். பசி வயிற்றைக் கிள்ளியது. ஒரு மரத்தின் கீழிருந்து' சகோதரி மங்கையர்க்கரசியின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு, அமிர் அண்ணன் கொண்டு வந்திருந்த 'பயத்தம் பணியார'த்தை ஒரு கை பார்த்தோம்...!

அமிர் அண்ணன் ஒரு பெரு மூச்சு விட்டார்.

**கோவை-மகேசன்**

'என்ன இப்படி திடீரென்று பெருமூச்சு விடுகிறீர்கள்?' என்றேன்!

''மாமல்லபுரத்தில் இந்தக் காட்சிகளையெல்லாம் பார்க்கும் போது ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும், மறு பக்கம் சோகம் வாட்டுகிறது. இப்படி பெருமையோடு, உன்னத வாழ்வு வாழ்ந்த தமிழினம், இன்று நாடிழந்து, ஆட்சி இழந்து, மொழி இழந்து அடிமைகளாக வாழும் நிலையை எண்ணும் போது பெருமூச்சு வராமல் இருக்குமா....?'' என்றார் அவர்!

''அந்த நிலையை நம்முடைய காலத்திலேயே மாற்றியமைப்பதற்குத் தானே நாம் நம்மை அர்ப்பணித்திருக்கிறோம்...'' என்றேன். அமிர் அண்ணன் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினார்:

உணவுமுடித்ததும், குகைக் கோவில்களையும் கல்லில் வடித்த இரதங்களையும் சுற்றிப் பார்த்துவரப் புறப்பட்டோம். 'கைடு' ஒருவன் வந்து எங்களுடன் ஒட்டிக் கொண்டான்.

''உன்னை எங்களுக்குத் தேவையில்லை. நாங்களே சுற்றிப் பார்த்துக் கொள்ளுகிறோம்...'' என்றேன். அவனோ இலேசில் விடுவதாக இல்லை.

''பரவாயில்லை... அவன் வரட்டும் கூட்டிப் போவோம்'' என்றார் அமிர் அண்ணன்.

''சரி, உங்களுக்கு இஷ்டம் என்றால் கூட்டிப் போவோம். ஆனால் வரலாற்றையே மாற்றிக் கண்டகண்டபடி உளறிவைப்பான். அதைக் கேட்டுக் கொண்டிருந்தால் தலைவலியேவந்துவிடும்! கூடவே டிஸ்பிரினையோ, ஆஸ்ப்ரோவையோ கட்டாயம் கொண்டு வாருங்கள்'' என்றேன்.

நான் கூறியது உண்மையாகிவிட்டது. பஞ்சபாண்டவர் பெயரில் பல ரதங்கள் அங்கு செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இடம் பெற்றுள்ள நுட்பமான கலைத் திறன்கள் நம்முடைய முன்னோரின் சிற்பத்திறமையை இன்னும் பறையறைந்து கூறிக் கொண்டிருக்கின்றன. வெள்ளைக்காரரும் ஏனைய வெளிநாட்டார் பலரும் வியந்து சொக்கிப் போய் அவற்றில் மயங்கி நிற்பதைக் கண்டேன்.

மாமல்லபுரத்துக்கு வருப் வெளிநாட்டாரிடம் தமக்குத் தெரிந்த கொச்சை ஆங்கிலத்தில் பொய்க் கதைகளைக் கூறிக் காசு கறந்து விடுகிறார்கள் பலே பேர்வழிகளான அங்குள்ள 'கைடு'கள். எங்களுக்கும் கொச்சை ஆங்கிலத்தில் 'விளக்கம்' அளிக்கத் தொடங்கினான் எங்களோடு வந்த 'கைடு' அதைக் கேட்கச் சர்ணகடூரமாக இருந்தது. காதை மூடிக் கொண்டு, ''நாங்களும் தமிழர்கள் தான் அப்பா, தமிழிலேயே உன் புழுகுமூட்டையை அவிழ்த்து விடு. உன்னையழைத்து வந்த பாவத்துக்குக் கேட்டுத் தொலைப்போம்......'' என்றேன்.

அவன் தனக்குத் தெரிந்த புழுகு மூட்டைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்துவிடத் தொடங்கினான்.

''இங்கேதான் வீமன் தயிர்கடைந்தான்... இங்கேதான் துரியோதனை வீமன் அடித்துக்கொன்றான். இங்கேதான் அர்ச்சுனனுக்கு கண்ணன் உபதேசித்தான்......'' என்று நீட்டி முழக்கிக் கொண்டே போனான்.

பாரதக்காட்சிகளை, பண்டைத்தமிழர்கள் கல்லில் வடித்திருக்கிறார்கள். இவனோ, அவையெல்லாம் மாமல்லபுரத்திலே தான் நடந்த நிகழ்ச்சிகளாக கதையளக்கிறான். பாரதக் கதை நடந்த இடமே தெரியாதவனிடம் வேறு எதைத்தான் நாம் கேட்டறிவது?

டிஸ்பிரின், அல்லது ஆஸ்ப்ரோ தேவைப்படுகிறதா என்று கேட்பதுபோல அமிர் அண்ணனின் முகத்தைப் பார்த்தேன்.

'கைடு' தந்த தொல்லைக்கு மத்தியில் குகைக் கோவில்களையும், ரதங்களையும் மற்றும் கல்லில் வடித்த எழிலோவியங்களையும் பார்த்து இரசித்துக்கொண்டிருந்த நான், திடீரென்று ஜல் ஜல் என்ற சதங்கையொலியொன்று எழுந்ததையும், அங்குள்ள எழிற்சிற்பமொன்று திடீரென்று உயிர் பெற்று வந்து உலவுவதையும் கண்டேன்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்த போது அது சிற்பமல்ல வென்பதும் அழகிய நடனமங்கையொருத்தியின் காலில் இருந்து எழுந்த சதங்கையொலியே அது என்பதும் தெரியவந்தது.

இப்படித்தான் அழகு மங்கையரை அபிநயிக்க விட்டு அந்நாட்களில் இந்தச் சிற்பங்களையெல்லாம் வடித்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு, சதங்கையொலி வந்த திசை நோக்கிச் சென்றோம்!

ஆஹா, எவ்வளவு மகிழ்ச்சி! நம் யாழ்ப்பாணத்து நங்கையே அந்தப் பெண்! செல்வி ஆனந்தவல்லி சச்சிதானந்தா அவர்களே அழகு தேவதையாக அங்கு காட்சி தந்து சதங்கை நாதம் ஜல் ஜல்லென்று ஒலிக்க பல அபிநயங்களை செய்து காட்டிக் கொண்டிருந்தார். இன்னொருவர் அவற்றைப்படம்பிடித்துக்கொண்டிருந்தார்.

செல்வி ஆனந்தவல்லியின் தயார் திருமதி சச்சிதானந்தா அவர்களுடன் அமிர் அண்ணன் சென்று அளவளாவிய போது, வெளிநாடுகளில் நடன நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு செல்வி. ஆனந்தவல்லி செல்லவிருப்பதாகவும், அதற்கு சில காட்சிகளை படம் பிடிக்க அவர்கள் அங்கு வந்திருப்பதாகவும் தெரியவந்தது.

செல்வி ஆனந்தவல்லிக்கு ஏற்படுகின்ற புகழ், ஈழத்தமிழ் நாட்டிற்கு ஏற்படுகின்ற புகழ்; அவர் தனது முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்று உளமார வாழ்த்திவிட்டு, மாமல்லபுரத்தைவிட்டு பிரிய மனமில்லாமல் பிரிகிறோம்.

முரசொலி அடியாரின் 'தங்கவங்கம்' நாடகத்திற்கு தலைமை தாங்குவதற்கு, தந்தை செல்வாவையும் அழைத்துக்கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து இனி நாம் சென்னைக்கு போய்ச் சேரவேண்டுமல்லவா?

— தொடரும்

---

**"சிங்களச் சிறையில்**
**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்"**

"கொடியில்லை படையில்லை
கோழையா நாங்கள்?
கோல்பிடித்த தமிழ்ச் சாதி
கால்பிடிக்கலாமா?"

என்று விடுதலைப் பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பிறகு தமிழினத்தின் பாசறைப் பண் இசைத்த காசி ஆனந்தன், அண்மையில் நடந்த இலங்கைத் தமிழர் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக சிங்கள வல்லாட்சியாளரால் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

பெரும் ஊதியம் தந்த ஒரு அரசாங்கப் பதவியை உதறியெறிந்துவிட்டு தமிழினத்தின் கைவிலங்கு முறிக்கும் போரில் குதித்து காராக்கிரகத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார். தமிழகத்தில் இருந்தபோது இவர் ஈடுபடாத தமிழியக்கப் பாசறைகள் எதுவுமில்லை.

தமிழினத்திற்கு ஒரு சுதந்திரத் தாயகத்தைத் படைக்கும் பணி உண்மையான தமிழன் எங்கிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் தொடர்வது இயல்பு தானே!

" வாள் தொட்ட கையெல்லாம்
வலி குன்றி வகை குன்றி வழக்கும் குன்றிப்
பாழ பட்ட அந்நாட்கள்
பலநாட்கள் ஆகாமல் பார்த்துக் கொள்வோம்
தோள்தட்டி மானத்தில்
தோய்கின்ற போராட்டம் தொடங்கினோமே!"

என்று அவர் பாடிய வரிகளையே நாம் அவருக்கு வாழ்த்தாக அனுப்புகிறோம்.

— தமிழ்நெஞ்சு ( சென்னை ஏடு )

---

**சிமோனுக்கு...**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுத் தமிழர் கூட்டணியில் சேராவிட்டாலும் சும்மாயிருப்பீரா?

நல்லூர்கந்தக் கடவுளே கண் திறந்து பாருமையா!

கன்னித்தமிழைக் காப்பீரையா!

கலங்குகின்ற தமிழினத்தைக் காருமையா!

கவிஞர் காசி ஆனந்தனைக் காப்பாற்றுமையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# இப்பொழுது வெற்றி நடை போடுகிறுன்!

# செல்லமகால் திரையில்

**ஒருநாள் ஒருபொழுதாகினும் ஈசன் நாமத்தை செப்புவாய் மனமே**

31 வருடங்களின் பின் சென்னையில் திரையிடப்பட்டபொழுது முதல் பத்து நாட்களிலும் 3 காட்சிகளும் 'அவுஸ் புல்' ஆகவும், மற்றைய நாட்களில் 'ஆல்மோஸ்ட் அவுஸ் புல்' ஆக ஓடி பெரும் சூறுவளியை ஏற்படுத்திய தியாகராஜ பாகவதரின் கர்ணுமிதி கானங்கள் நிறைந்த பக்திப்பரவசம் பொங்கவைக்கும்

# திருநீலகண்டர்

## 3வது வாரம்

**சென்ரல் (மருதானை)**

சிவாஜிகணேசன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
முத்துலட்சுமி
ரி. ஆர். ராமச்சந்திரன்

—நடித்த—

# இருவர் உள்ளம்

## வெகு விரைவில்

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
எம். ஆர். ராதா
மனோரமா
வி. கே. ராமசாமி

—நடித்த—

# பட்டிக்காடா பட்டணமா?

## 5வது வாரம்

**கிங்ஸ்லி**
(கொழும்பு)

**லிடோ**
(யாழ்நகர்)

**விஜயா**
(மட்டுநகர்)

சிவாஜிகணேசன்
சரோஜாதேவி
முத்துராமன்
சோ — மனோரமா
தேங்காய்சீனிவாசன்
ஜெய்குமாரி
வி. கோபாலகிருஷ்ணன்

நடித்த

இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: வி. ஸ்ரீனிவாசன்



# "அருணோதயம்"

**வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டது**

**கெப்பிட்டல்** (கொழும்பு) — **ஸ்ரீகிருஷ்ணு** (திருமலை)

**விஜிதா**
(ஹற்றன்)

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
பாலாஜி
நிர்மலா - சோ
மற்றும் பலர் நடித்த



ஜேயார் மூவிஸ்

# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் [illegible] கொழும்பு புண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.